உ

கணபதி துணை.

வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக."—திருக்குறள்.

தொகுதி.	நள-ஹூ பங்குனி-மீ	பகுதி.
9	1917 ஏப்ரல்.	3.

கல்வியும் தர்மமும்.

இதற்குமுன் ஸஞ்சிகையில் "கல்விமுறையில் சீர்திருத்தம்" என்று எடுத்துக்கொண்டு, 'இப்போது நமது நாட்டு மாணவர்கட்குக் கொடுக்கப்படும் கல்விமுறையானது உண்டிக்கும் உடைக்கும் மாத்திரம் ஏகதேச உதவியாகின்றதேயன்றி, மாணவனுடைய புரோவ்ருத்தியையாவது ஆத்ம வ்ருத்தியையாவது நாட்டின் நன்மைக்கு ஏற்ற ஞானவ்ருத்தியையாவது கொடுத்தற்கியலாததாக இருக்கின்றது, என்பது ஒருவாறு குறிக்கப்பட்டது. இந்த ஸஞ்சிகையில் ஒரு நாடு செழிக்கவேண்டி அந்நாட்டுத்தர்மத்தைப் போற்றுவதிலே ஒரு மாணவனுக்கு எவ்வளவு சம்பந்தமிருக்கின்றது என்பதை யாஜமாக வைத்துக்கொண்டு, 'கல்வியும் தர்மமும்' என்னும் விஷயத்தை ஆராய்வோமாக. இந்த விஷயத்தில் நாம் அதிக சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. இதற்கு முன்னால் நமது பூர்விகர்கள், "ஒழுங்கான கல்வியே தர்மத்தை உயர்த்தும்" என்று பலப்பல நூல் மூல

மாகக் கோஷித்திருக்கிறார்கள். அவருள்ளும் ஆதிமனுவானவர் தமது தர்மசாஸ்திரத்தில் இவ்விஷயத்தைப் பரக்கப்பேசி யிருக்கிறார்கள். அதனையே இப்போது அடியொற்றிப்போவது அழகென மதிக்கிறோம்.

இந்தியாவின் கல்விமுறையைப் பற்றி—ஆதிகாலமுதல் இதுவரை—ஒரு சரித்திரம் எழுதவேண்டுவது அவசியமாயினும், இப்போது அதனை விரிக்காமலே, ஐரோப்பியர் நமது நாட்டில் வந்து நுழையும் வரையிலே, எந்த முறையைப் பின்பற்றியே மாணவர்கட்குக் கல்வி போதிக்கப் பட்டுவந்தது? அதனால் தேசத்தில் உண்டாயிருந்த பெருமையென்ன? என்னும் இவைபோன்ற சில விஷயங்களைப் பேசுவோமாக.

மனுதர்ம சாஸ்திரத்தினை, ஒருவர் அதன் மூலக்ரந்த ரூபத்திலாயினும், அதன மொழிபெயர்ப்பு க்ரந்தரூபத்திலாயினும் ஊன்றிப் படித்தாராயின், கல்விமுறையில அவர் கொண்டிருந்த அபிப்பிராயமும், கல்வியே உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாத ஸாதனம் என்னும் அவரது கொள்கையும், அதனை மாணவர்க்கு ஏற்ற வேண்டிய முறையில் அவர் சீர்திருத்திய ஒழுங்கும் படிப்பவரது மனதுக்கு ஓர் அதிசயத்தை யுண்டுபண்ணுமன்றோ.

அவரது முறை வெகுகாலங்கட்கு முன்னமே சொல்லப்பட்டதேனும், நமது நாட்டின் தற்கால நிலையிலும் ஆண் பெண் இருபாலார்க்கும், தேசமுன்னேற்றத்தின் நிமித்தம், அவரது முறையையே பின்பற்றித்தல் வேண்டும் என்பதை எவரும் நினையாதிரார். அவரது முறையே எக்காலத்துக்கும் ஏற்ற ஒழுங்கான முறையென்றும் துணிவாகச் சொல்வோம்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நாட்டினுக்கும் தர்மமே கல்வியின் அடிப்படையாக இருக்கின்றது என்று அவர் சொல்கிறார். ஒவ்வொருவரும் தமது பூர்வஜன்ம வாஸனைக்கேற்ற தர்மத்தைக் கைப்பற்றி இருக்கிறார் என்றும், அந்தத் தமது தர்மத்துக்கு ஏற்ப உலக நடையில் ஒழுகி வருகிறார் என்றும் அவர் குறிக்கிறார். அந்தத்

தர்மமும் தமது இப்பிறப்பின் பழக்கவழக்கங்களினால் சீர்பாடடைந்து முன்னேற்றத்தை அடைய இருக்கிறது. அவ்விதம் முன்னேறிச் சீர்திருத்தம் அடையும் ஒருவனுடைய கருமமே உலகக்கூட்டுறவில் அவனை ஒரு பங்காளியாகச்சேர்த்து வைக்கிறது. இச்செயல்தான் அவனுடைய லௌகிக வைதிகப் பிரவிர்த்திகளைச் சீர்திருத்துகிறது.

இச் சீர்திருத்தமான தர்மத்தை அடிப்படையாகவைத்தே வர்ணங்களும் ஆச்ரமங்களும் வகுக்கப்பட்டன என்று ஊஹிப்பதற்கும் இடமிருக்கிறது. இந்த வர்ணங்களும் ஆச்ரமங்களுமாகிய பாகுபாடுகள் இல்லாவிடின் ஒருவர் ஆத்மவிருத்தியில் பிரயத்தனப்படல் இயலாது எனவுந் தோன்றுகிறது.

எனவே, அவர் தமது தர்மசாஸ்திரத்தில், தர்மம் செயல் கூட்டுறவு என்னும் மூன்றையும் சொல்வாராகிக் கல்வியையே இவற்றினுக்குக் கொழு கொம்பாகவும் குறித்துள்ளார். அவரது முறையைப் பின்பற்றிக் கற்பிக்கப்படுவோரும் ஒவ்வொரு மாணவனும் தேசதர்மத்தை நன்குணர்ந்தவனாகி, முன்னுக்கு வர முயல்வான். இப்படியே அநேக மாணவர்கள் முன்னேறிவருவார்களாயின், நமது தேசம் தற்கால நிலைமையினின்றும் விடுபட்டு உலகத்திலுள்ள தேசங்களைக் காட்டிலும் சிறப்புப் பெற்றோங்கும் என்பதில் யாதொரு தடையுமிராது. அப்பொழுதே நமது ஆர்ய தர்மம் சீரோங்கிவளரும். அப்பொழுதே மனுவினுடைய கல்வி முறை வேரூன்றி நிற்கின்றது என்று சொல்லலாகும்.

ஐரோப்பிய தேசங்களில், தேசதர்மம் என்றால் யுத்ததர்மம் என்பதையே விசேஷமாகக் குறிப்பதாகத் தெரியவருகிறது. ஏனெனில், தேசவூழியம் செய்வது என்றால் ராணுவத்தில் பழகுவதையே விசேஷமாகக் கொள்ளுகிறார்கள். ஆனால் அவர்கள் அப்படிக் கொள்கிறதற்கு ஒரு நியாயமும் இருக்கிறது. இப்போது ஒவ்வொரு தேசத்தின் நிலைமையும், விசேஷமாக ஐரோப்பிய தேசங்களின் நிலைமை, உட்பகையிலும் அவநம்பிக்கையிலும் அதிருப்தியிலும் குறைபாடுபட இருக்கின்றது. ஆகையினால்

ஒவ்வொரு தேசமும் தற்காவலுக்காக யுத்தத்துக்கு வேண்டிய ஆயுதங்களுடனே எப்போதும் இருக்கவேண்டி யிருக்கிறது. அதனாலேயே தேசஊழியம் என்று ராணுவஊழியத்தையே முதன்மையாக அவர்கள் கொள்ளவேண்டியிருக்கிறது.

நமது தேசமோ, உட்பகைக்கும் அதிருப்திக்கும் இடங்கொடாத பழக்கத்தில் வளர்ந்து விட்டமையால், தேசதர்மமென்பது நமது பூர்விகரது ஆசாரமென்ற பொருளில் பழகித் தேசஊழியம் என்பது கூட்டுறவின்பால் படுகிறது. மனுவின் முறையோ அறிவின் முதிர்ச்சியைத் தருவதாகிய சாஸ்திர பரிசயம் ஒருபக்கமும், தேசபோஷணைக்குக் காரணமாகிய விவசாயம் ஒருபக்கமும், தேசத்தின் திரவிய விருத்தியைச்செய்யும் வியாபாரம் ஒருபக்கமும், தேசக் காவலைத்தரும் போர்த்தொழில் ஒருபக்கமுமாக வளர்ந்து வரக் கூடியதாக அமைக்கப்பட்டிருக்கிறது. இவைகளே பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்ரதர்மங்களாகக் கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. இந்தவர்ணதர்மங்கள் அவரவர் முற்பிறப்பில் பழகியுள்ள அநுபவமுறையின் பயனாகப் பெறப்படுகின்றன. ஆக, நமது தேசத்துள முன்னோரது அபிப்பிராயம், போர்த்தொழில் என்பது ஜாதி தர்மமாகவும், தேசஊழியம் என்பது கூட்டுறவாகிய தேசதர்மமாகவுமே கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

எனவே, நமது தேசத்தில் ஒவ்வொருவரும் தமது ஆத்மதர்மமாகிய ஜாதிதர்மத்திலும், அதனுள் மாறுபாடடையாதிருந்து தேசப்பொதுத்தர்மமாகிய கூட்டுறவிலும் பழகித் தம்மையும் தமது தேசத்தையும் விருத்திக்குக் கொண்டுவர வேண்டுமென்பது மனு முதலிய நமது முன்னோரது கொள்கையென்பதும் கொண்டோம். இவ்விரு தர்மங்களுக்குத் தக்ககல்வியை ஒழுங்காக ஓர் நல்லாசிரியன் இருந்து பயிற்றுவிடில், மாணவர் தம்மையும் தமதுதேசத்தையும் பற்றிய உணர்ச்சியே பெறாது, ஊனப்பாடங்களை உள்ளவும் கற்று உண்டிக்கும் உடைக்குமே உழைப்பவர்களாவார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாம். 'இதற்கு மனுவாக்கியம்:—

“ஒருகுடும்பத்தின் நற்போக்கு ஒருமாணவனது திருந்திய ஸ்வபாவச் சார்ந்திருக்கிறது. அப்படியான குடும்ப வாழ்வை ஒரு

தேசக்கூட்டுறவை உயர்த்துகிறது. அக்கூட்டுறவு தேசப்பொக்கிஷத்தைப் பாதுகாக்கிறது. தேசக்காவலே அத்தேசத்தின் உயர்ந்த சக்தியை உறுதிப்படுத்துகின்றது.''

இப்போது நாம் நமது தேசத்தின் தற்காலக்கல்வி முறையைச் சிறிது தொட்டுப்போவோம். இப்போது கர்மக்கள் எல்லாவற்றுள்ளும் வித்தியாதர்மத்தின் முக்கியாம்சமாகிய உபாத்திமைத் தொழிலானது மற்ற எந்தத்தொழிலிலும் மிகவும் தாழ்ந்ததாக மதிக்கப்பட்டு வருகிறது. நமது மனு தமது தர்மநூலின்கண் உபாத்திமைத் தொழிலுக்கு ஏற்றம் கொடுத்திருப்பது போல, இவ்வுலகத்தில் எந்தத் தேசத்திலும் யாராலும் ஏற்றம் கொடுக்கப்படவில்லையென்றே துணியலாம். இந்தியாவிலும், ஐரோப்பிய நாகரிகம் வந்து கூத்தாட ஆரம்பிக்கும் வரையில் அந்த ஏற்றம் நிலைத்தே இருந்தது. இப்போதும் நமது மாணவருக்குக் குருபக்தி யென்பது இயற்கையாக இருந்து கொண்டே இருக்கிறது. எனினும், அது ஐரோப்பியப் பழக்க வழக்கங்களினால் அழிக்கப் படுகின்றது. ஐரோப்பாவில் குருபக்தி என்னும் ஆலோசனையே ஒரு அவமானச் செயலாகக் காணப்படுவதாக அறிகிறோம். அந்தத்தேசத்து மாணவர் தமது குருவைத் தம்மைக் காட்டிலும் மூத்தவர் என்று மதிப்பதே பெருந்தன்மையாகக் கொள்ளப்படுகிறது.

தவிர, தற்காலம் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் மரியாதைக்குத் தக்கவர்களில் பெரும்பாலார் உபாத்திமைத் தொழிலுக்கு வருவதே இல்லை. பல உபாத்தியாயர்கள் சாதாரண கவுரவத்தையும் பெறக்கூடாதவர்களாக இருக்கின்றார்கள். இது அவர்களுடைய தவறாகாது. அவர்களுக்குத் தக்கமுறையில் கல்வி பயிற்றுவிக்காததே பெருந்தவறாகும் என்று எண்ண இடமிருக்கிறது. சில உபாத்தியாயர்களே தங்களது ஒழுக்கம் சக்தி ஆழ்ந்தபுத்தி தெளிந்தஆராய்ச்சி இவற்றைக் கொண்டு, தமக்கு வேறு தொழிலில் மிகுந்த சம்பத்தியம் கிடைக்கலாமாயினும், தேசமுன்னேற்றத்தை யுன்னியே இந்த உபாத்திமைத் தொழிலிற் புகுந்து, ஏற்ப, தகுந்த மரியாதையும் பெறுகின்றார்கள். இவர்களைப்போலப் பலர் கிளம்பின அன்றுதான் நமது மனுமுறை மனுவின்முறைப்படி நடக்கலாகும். எந்தத்தே

சத்தில் உபாத்தியாயர்களை தேசக்காருக்குள் சிறந்தவர்களாகக் கௌரவிக்கப்படுகிறார்களோ, அந்தத் தேசமே முன்னேறி உலகத்தின் மற்றத் தேசங்களுக்கு ஓர் வழிகாட்டியாக நிற்கும். ஏனெனில் உபாத்தியாயர் தமது தர்மத்தை ஒழுங்குபெற நடத்திவர்களாயின் மாணவரும் தமது தர்மத்தைச் சரிவர நடக்க முன் வருவார்கள். மாணவர் மாண்பெறுவாராயின் மனுஷ்யரும் மாண்புபெறுமல்லவா? எனவே, ஒவ்வொரு தேசத்துப் பாடசாலையும் அந்தத்தேசத்து ஆசாரத்திலே பழகிய ஒருவராலேயே தலைமை வகிக்கப்படவேண்டுமென்பது வற்புறுத்தல் எளிதாகும். அதாவது இந்திய தேசத்துப் பாடசாலைகள் இந்தியர்களாலேயே ஆட்சி பெறவேண்டுமென்பதாம். ஏனென்றால், எத்தனையோ ஐரோப்பிய மேதாவிகள் மனு முறையைக் கரைத்துக் குடித்துக் கல்வி முறையில தலைமை வகித்திருக்கிறார்கள்; எனினும், இக்கல்விமுறை மட்டும் இன்னும் மனுவின் முறைக்குத் திரும்பினபாடில்லை. அதனால்தேசம் திருந்தினபாடில்லை. இங்கிலாந்தில் இப்போது, பின்வரப்போவதை யோசியாமல், போர்த்தொழிலைக் கைக்கொள்வதையே மேன்மையாகக் கொண்டு, உபாத்தியாயர்களையும் அரண்களில் இருந்து சண்டையிட அனுப்பியிருக்கிறார்களென்று நம்புகிறோம்.

அநேக ஒவ்வொரு இடத்திலும் கல்விக்குவேண்டிய ஸாதனங்களைக் குறைத்துவிட்டார்கள். ஆனால், தற்போது இங்கிலாந்திலுள்ள மெடிகல் டாக்டருடைய சமீபரிபோர்ட்டினால், கல்விச்சபைத்தார் ஒருகூட்டம்கூடி அத்தேசத்துப் பிள்ளைகளின் படிப்பில் முயற்சி எடுப்பதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். உண்மையாக, அது முயற்சித்து வருமானால், நமது தேசமும் கவனிக்கப்படுமென்று எண்ணுகிறோம். என்றாலும், அது நாம எண்ணுகிறபடி நமது தேசத்தின் நன்மைக்கு வழிகொடுக்கும் என்று எண்ணுவதற்கு இடமில்லை. ஆனால், பரோடா நாட்டிலும் மைசூர் நாட்டிலும் ஆரம்பித்திருக்கிறபடி எமது நாட்டில் ஆரம்பித்தாலும், நமது எண்ணத்தில் பெரும்பான்மை கைகூடலாகும். அன்றியும், ஸர்க்காரை எதிர்பாராமல், நாட்டு மஹாஜனங்கள் பொதுவில் கல்விச்சங்கத்

களை ஏற்படுத்தி நமது தேசநன்மையை நாடுவதே சால்புடைத்தாகும். அதனால் அரசாங்கத்தாருக்கும் அதிக பணச்சுமை தோன்றாது. நமது அரசாங்கமும் அதனையே கோருகிறது. இச்செயலுக்குச் சாட்சியங்களாக, ஆரிய ஸமாஜமும் ஹரித்வாரத்தில் உள்ள குருகுல கலாசாலையும் போல்பூரிலுள்ள ரவீந்திரநாத டாகூர் கலாசாலையும் நமது தென்னாட்டில் பல இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பச்சையப்பன் கலாசாலைகளும் முன் வருகின்றன.

எந்தக் கலாசாலை யாவரும் வியக்க முன்னேறி வந்திருக்கிறதோ, அந்தக்கலாசாலை இந்தியர்களால் நடத்தப்பட்டு வருவதை நாம் நன்றாக கவனிக்கலாம். ஏனெனில், தேசமும் இந்தியா, மாணவரும் இந்தியர். இவ்விதம் கல்விசங்கம் இந்தியர்கள் வசப்பட்டால் தற்காலக் கல்விமுறையிலிருந்தும் அவசியம் திருத்தப்படவேண்டியவை எவை யென்பது ஆலோசனைக்கு வரலாகும். முதலில், உபாத்தியாயர்கட்கு பூர்விக முறைப்படியான கௌரவஸ்தானம் கொடுத்து மரியாதைப்படுத்தவேண்டும். ஆனால், உபாத்தியாயர்களை நியமிப்பதில் மிகுந்த கவனம் செலுத்தித், தமது நயம் கோராமல் தமது தேசத்தின் நன்மையையும் தமதுதேச மாணவர்களின் நன்மையுமே கோரும் ஸ்வபாவம் வாய்ந்தவர்களையே அத்தொழிலில் நியமிக்கவேண்டும். ஒருவரை நியமிப்பதற்கு முன் அவரது அறிவு ஒழுக்கம் இரண்டில் ஒழுக்கத்தையே ஊன்றிக் கவனிக்கவேண்டும். மனுவும் சொல்கிறார்:—"ஒருவரது சீலம் குணம் ஆசாரம் கருணை இவைகளையே ஊன்றிப்பார்க்கவேண்டும்" என்று.

எனவே, நமது தேசதர்மம் ஒழுக்குப்பெறுவது மாணவர்களைச் சார்ந்திருக்கிறது. மாணவர்கள் ஆத்மதர்மத்தை உணர்ந்தால் அல்லாமல் தேசதர்மத்தில் காலிட அறியார்கள். அவர்கட்கு அத்தர்மத்தை யூட்டுவது நல்லாசிரியர் தொழிலாகும். நல்லாசிரியர் என்பார், சீலம் குணம் ஆசாரம் கருணை என்னும் இவைகளையுடையார். அந்நல்லாசிரியரைக் கல்விச்சங்கத்தார் மனு முறைப்படி கௌரவிக்கவேண்டும். அதற்கு ஏற்பக் கல்விச்சங்கங்களும் நம்மவராலேயே நடத்தப் பெறல்வேண்டும் என்பது பெற்றோம்.

ஆகையினால் தேசமுன்னேற்றத்திற் கவலைசெலுத்தும் தேசாபிமானிகளே! பலபாஷைகளில பயின்று கற்பாஷையின் முன்னேற்றத்தைக் கோரும் பாஷாபிமானிகளே!! வித்யாதர்மத்தில் திரும்பி விளங்குறும் வைசியமணிகளே!!! உங்கள் உணர்வையும் பொருளையும் இந்தத்தர்மத்தில் செலவிட முன்வருவீர்களென்று மிகவும் வினயத்துடன் வேண்டிக்கொள்கின்றோம்.

பத்திராதிபர்

நீதி வார்த்தைகள்.

ஒரு தேசத்தின் நிலை பெற்ற தன்மை, பிரோவ்ருத்தி களிப்பு இவை அத்தேசத்தினது மதக்கொள்கையே சார்ந்திருக்கிறது.

கடவுளின் வியாபகத்துவத்தை அறியாமல், ஒருவன் தன்னை அறிந்து கொள்ளமாட்டான். தன்னை அறிந்துகொண்டவனே கடவுளை அறிந்தவனாவான். தன்னை அறிந்தவனாவான் தன்னை எல்லா ஜீவர்களிடத்தும் கண்டவனே ஆவான்.

எல்லா ஜீவர்களிடத்தும் தன்னைக்காண்பதாவது, எல்லா ஜீவரையும் தன்னைப்போலவே பாவிப்பது ஆகும். அதாவது அவரது சுகதுக்கங்களைத் தன்னுடையவாசப்பாவித்தலேயாகும். இந்த அநுபவத்தை ஒருவன் தானாக அறியலாம். ஆனால் அதனைத் தனது சகோதரனுக்குக் காண்பிக்க முடியாது. அதாவது அநுபவமுறையைத்தானே பெறவேண்டுமேயல்லாது ஒருவரால் கற்றுக்கொள்ள முடியாது என்பதாம். அதனால்தான் ஆசாரியர்கள் என்பார் கடவுளை யறியும் வழியைக்காண்பிப்பதற்கு ஒரு வழிகாட்டியாகமாத்திரம் இருக்கிறார்கள். அவர்கள் காட்டும் வழியாவது, "பாவரிடத்தும் பாவறறிஞரிடத்தும் அன்புடையவனாக இரு" என்பதாம்.

த்வேஷம் கோபம் வெறுப்பு தோன்றவே இடம் கொடுக்கப்படாது. அப்படித் தோன்றினாலும் உடனே பகுத்தறிவைக் கொண்டு அடக்கிக்கொள்ளவேண்டும்.

"அன்பே எல்லா ஜீவர்க்கும் ஆதியும் அந்தமுமாமும். அன்பில்லாவிடில் ஒன்றும் இல்லை" என்று ஒரு ஞானிஷி சொல்கிறார்.

இளங்கோவடிகள்.

[52-ம் பக்கத்தொடர்ச்சி.]

5. துறவடைதல்:—ஒருநாள் நெடுஞ்சேரலாதன் மந்திராலோசனை மண்டபத்தில் மன்னவர் சூழ இளவரசர் நால்வருடனும், அமைச்சர் கூட்டத்துடனும் வீற்றிருக்கையில், முக்காலமும் அறிந்து கூறவல்ல சோதிடன் அரசன் சமூகத்தை அடைந்து அரசனையும் இளவரசர்களையும் அடிமுதல் முடிவரை பார்த்து, "மன்னர் மன்னனே! நீ சுவர்க்கம் புகுங்காலம் சமீபித்தது; உன்னரசியலை உனக்குப் பிறகு வகிக்கும் சாமுத்திரிகா லக்ஷணம் அமைந்தவன் இளங்கோவே" எனப்பலருமறியக்கூறினான். அரசுரிமை பெறுதற்குப் பிறந்த முறைமையால் உரியசெங்குட்டுவன் இவ்வாக்கைக்கேட்டு மனம் வருந்திநின்றனன். இதனை அறிந்து மூத்தோன்மனத் துன்பத்தைத் தணிப்பதே தம் அருங்கடமையென எண்ணிய பேரறிவும் உத்தம குணங்களும் நிறைந்த இளங்கோ, முறைமைகெட ராஜ்யாதிபத்யத்தைப் புகன்ற பெருமிதத்தவனை வெறுத்துரைத்து, அந்த ராஜசபையிலே தமக்குக் கிடைத்து நிற்கும் அரசாளுரிமையை வெறுத்து. செங்குட்டுவனுக்கு அரசியலைக்கொடுத்து, அகப்பற்று புறப்பற்று என்னும் இரண்டு ஆசைகளையும் வெருட்டி, சன்னியாச ஆச்சிரமத்தைக் கைக்கொண்டு, செய்தற்கரிய செய்கைபோதியபஞ்சேந்திரியங்களை அடக்கி ஜிதேந்திரியராய் ராஜரிஷியாகி, தமையன் பொருட்டு இம்மையின்பத்தை நிக்கிரகித்தலால் சேரர்குலத் திலகனாகி அரசர்க்கு அறிவுறுத்தும் பெருங்குருவாய் அமர்ந்து, அந்தமில இன்பத்து அழிவில் வீட்டையரசாளும் மன்னர் மன்னனாகி விளங்கினார்.

6. காலக்ஷேபம்:—இங்ஙனம் தமக்கென வாழாது பிறர்க்குரியாளராகி, வஞ்சிநகரத்தின் கீழ்த்திசையில் உள்ள "குணவாயிற் கோட்டம்" என்ற தவச்சாலையில் தமக்குரிய ஒழுக்கத்திலே நின்று, தத்துவ உணர்வுபெற்று, ஐம்பொறிகளை அடக்கி, யோகப்பயிற்சியில் அமர்ந்தனர். தக்க காலங்களில் தம்மிடம் வரும்பண்டிதர்களுட

னும் பாமரர்களுடனும் அளவளாவி அவரவர்க்குரிய மதாபிமானத்திற்குத் தக்கவண்ணம் வேதாந்த உபதேசம் செய்துவருவது இவர் வழக்கம். இவர் பெருந்துறவியாக இருந்ததுமன்றி அக்காலத்திருந்த வித்வான்களுள் சிறந்தவராகவும் விளங்கினர். துறவறத்திருந்த இளங்கோவை ஜனங்கள் மரியாதையாக இளங்கோவடிகள் என வழங்கத் தொடங்கினர். (அடிகள்—சுவாமி)

7. சிலப்பதிகாரம் இயற்றிய வரலாறு:—இங்ஙிலைமையில், புலவர் பாடும் புகழுடைய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் வானவர் எதிர்கொள்ள வானுலகம் சென்றனன். பிறகு செங்குட்டுவன் முடிசூட்டப்பெற்று சேர அரசனாய் விளங்கினன். இந்நாட்களில் ஓர்நாள் மஞ்சுசூழும் சோலைகளையுடைய மலைவளத்தைக் கண்டு களிக்க எண்ணி, இளங்கோவடிகள், மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் முதலிய பாவலர்களுடன் பெரும்பரிவாரங்கள் சூழச் சென்று, செங்குன்று என்னும் மலையினின்று வீழ்ந்து பிரவகித்து ஓடும் பேரியாற்றங்கரையின் மணல்மிக்க எக்கரில் முன்னமே நிருமித்த கூடாரத்தில் அமர்ந்தனன். உடனே மலைவாழ்குறவர்கள் அரசனுக்கு நல்வரவுகூறி, “இவ்விடத்துள்ள வேங்கைமரத்தின்கீழ் மங்கை ஒருத்தி (கண்ணகி) ஒரு தனம் இழந்து பெருந்துயருடன் வந்து நிற்க, தேவர்கள் அநேகர் இவ்விடம் வந்து அவள் காதற்கொழுநனைக் (கோவலனை) காட்டி, அவனையும் விமானத்தேற்றி, எங்கள் கண்முன்பு விண்ணுலகம் சென்றனர். அவள் எந்நாட்டாளோ! யார்மகளோ! யாங்கள் அறிந்தோமில்லை. தேவரீரே இதனை அறிதல் வேண்டும்” எனக்கூறிவாழ்த்தி நின்றனர். அச்சமயம் அரசனது பெருஞ்சிறப்பையும் மலைவளத்தின் சேர்த்தியையும் கண்டுகளித்திருந்த மதுரைச்சாத்தனார், கண்ணகியின் மதுரையில்நடந்த வரலாறு முழுவதையும் நேரில் அறிந்தவராதலின், அரசன் சமூகத்தில் விரிவாய்க்கூறினர். மற்றொருகால் மாடலன் என்னும் மறையவன், செங்குட்டுவன் முன்னிலையில் வந்து நின்று அரசனை ஆசிர்வதித்து, “மாதவியென்னும் நாடகக் கணிகையின் கடற்கரைப்பாடலானது கனகவிஜயாது முடித்தலைகளை இங்ஙனம் நெரித்தது. இது வியக்கத்தக்கது!” எனக்கதையைச் சுருக்கக் கூறி

னர். உடன் செங்குட்டுவன் மாடலனைப்பார்த்து "நீர் சொன்ன வாக்கியத்தின் பொருள் யாது?" என, அந்தணன், காவிரிப்பூம்பட்டினத்து நிகழ்ந்த வரலாறு முதல் கனகவிஜயரின் தலையில் பத்தினிக்கல்லைக் கொண்டுவந்தவரை யுள்ள வரலாறுகளைக் கூறினர். சோழநாட்டிலும் பாண்டியநாட்டிலும் வணிகர் குலப்பெரு மக்களாகிய கண்ணகி கோவலர் விஷயமாக நடந்த வரலாறு முழுவதையும் மாடலன் வாயுரையாலும் சாத்தனார் வாய்மொழியாலும் கேட்டு, சேரநாட்டில் நடந்த விவரங்களைப் பிரத்தியக்ஷத்திற் கண்டு, இத்தகைய உத்தம பத்தினியாகிய கண்ணகியின் பொருட்டுச் சிறந்த காவியம் ஒன்று இயற்றி அவள் அருளைத்தாம் அடைய வேண்டுமென்று விரும்பினர். விரும்பித் தன்னுயிர்த்தோழராகிய சாத்தனாரைப்பார்த்து,

"அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரணம் ஆகச்
சிலப்பதிகாரம் என்னும் பெயரான்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்"

என்று பொதுநிலைமையிற்கூற, சாத்தனார் இவ்வுத்தம வீரபத்தினியின் சரிதை,

"முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது
அடிகள் நீரே அருளுக."

நீரே நடுநிலைபிறழாமல் மூவேந்தரையும் ஏற்றத்தாழ்வில்லாமல் உயர்த்தும் தகுதியுடையவர். ஆகலின் மூவேந்தர்க்கும் உரிய மூன்று நாட்டிலும் நடந்த வீரபத்தினியின் சரிதத்தைக் கூற வேண்டும் என்றுகேட்டுக்கொண்டனர். உடனே அடிகள் சாத்தனார் கேட்டுக்கொள்ள, மங்கலவாழ்த்துப்பாடல் முதல் வரந்தரு காதை இறுதியாக முப்பது காதைகளாகவும், புகார்காண்டம் மதுரைக்காண்டம் வஞ்சிக்காண்டம் என மூன்று காண்டங்களாகவும் வகுத்து உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுளாகச் சிலப்பதிகாரம் என்னும்பெயருடன் நூலை இயற்றிச் சாத்தனாரைத் தலைமைக்

யாகக் கொண்ட அவைக்களத்தே அரங்கேற்றிச் கண்ணனை மேதி யின் கருணைக்கிலக்காயினர் என்பர்.

(8) நூற்சிறப்பு:—பின்னர், கோவலன் மகளாகிய மணிமேகலையின் வரலாற்றை நீர் செய்தருள வேண்டுமெனச் சாத்தனாரை வேண்டிக்கொள்ளச் சாத்தனாரும், மணிமேகலை துறவு என முப்பதுகாதையுள் சிறந்தநீதிகள்விளங்க இயற்றினர். சிலப்பதிகாரம் மணிமேகலை என்னும் இரண்டும் பண்டைக்காலந்தொட்டு வண்டமிழ் வாணர்களால் ஐம்பெருங்காவியங்களில் இரண்டாவதாகவும் மூன்றாவதாகவும் இலங்கித்து எண்ணப்பட்டு, இவற்றைக் கற்றறிந்தே தமிழ்க்கல்வியிலும் ஒருவாறு நிபுணர்களாகின்றனர் என்று தமிழ்நாட்டவரால் ஒருதலைபாகக்கொள்ளப்பட்டுச் சிறந்து விளங்கி நிற்கின்றது. இவ்வடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்தின் சொற்பொருள்வளங்கள், அறிஞர் பலராலும் அறிந்து மகிழ்தற்குரியன. பண்புடையாளர் தொடர்பைப்போல நவில்தொறும் இன்பம் பயப்பது, தொட்டனைத்தூறு மணற்கேணிபோல் கற்றனைத்து அறிவுபயப்பது. இதன் பெருமையை விரிப்பிற் பெருகும்.

(9) மதம்:—இவ்வடிகள் ஜைநமதத்தில் பற்றுள்ளவராகவே இவரது வாக்கின் போக்கால் உய்த்துணரப்படுமாயினும், இவர் வைதிகமதத்தைச் சேர்ந்தவர் என்று கருதுதற்குரிய அத்தாட்சிகளும் இவர் வாக்கில் உள்ளன.

1. "செஞ்சடை வானவன் அருளினில் விளங்க,
 வஞ்சித் தோன்றிய வானவ! கேளாய்"

2. "நிலவுக்கதிர் முடித்தோன் நீளிருஞ் சென்னி
 உலகுபொதி யுருவத் தயர்ந்தோன் சேவடி
 இறைஞ்சாச் சென்னி இறைஞ்சி வலங்கொண்டு"

இவ்வாறு தம்தமயனை செங்குட்டுவனைக் கூறுதலால், இவர் சைவமதப்பற்றுடையவர் என்று வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றது; ஆயினும், அக்கால வழக்கப்படி மற்றையமதங்களிடத்தில் பேதபுத்தி உடையவரில்லை. மதங்களிடத்தில் சமரஸபுத்திநிறுத்தியவர்.

10. அக்காலத்துப்புலவர்கள்:—மதுரைக்கூலவாணிகன் சாத்த

னார் பரணர் கபிலர் பாலைக்கௌதமனார் காப்பியாற்றுக்காப்பியனார் காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் முதலிய பலராவர்.

11. சமகாலத்தரசர்கள்:—இவர்காலத்தில் சேரநாட்டில் அரசாண்டவர் சேரன்-செங்குட்டுவன். சோழநாட்டில்:-சோழன் மணக்கிள்ளிமகன்-நெடுங்கிள்ளியும், கிள்ளிவளவனுமாவர். பாண்டியநாட்டில்:-அரசகட்டிலிற்றுஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியனும் வெற்றிவேற்செழியனுமாவர். இம்மூவரசராலும் கொண்டாடப்பட்டார் இவ்வடிகள்.

12. காலம்:—இவ்வடிகளின் தமையனாராகிய செங்குட்டுவனின் காலத்தைக்கூறவே இவர்காலமும் சற்றேறக்குறைய அக்காலமென அமையும். செங்குட்டுவன்காலம் கி-பி ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். செங்குட்டுவன் 55 வருஷகாலம் அரசாண்டனன் எனக்கூறப்படுதலால், செங்குட்டுவன் இறக்குந்தருணத்து இளங்கோவடிகட்குச் சற்றேறக்குறைய 50 வயதிருக்கலாம் என ஊகிக்கப்படுகின்றது. இளங்கோவடிகள் 50 வயதின்மேல் 60 வயதிற்குள்ளாக இக்காவியத்தைச் செய்தவராயிருத்தல்வேண்டும் என்றுகூறவேண்டும். ஆகையால் இளங்கோவடிகள் காலமும், சிலப்பதிகாரம் மணிமேகலை என்ற இரண்டு காவியங்களின் காலமும், இற்றைக்கு 1450 வருஷங்களுக்கு முன் எனச் சரித்திர ஆராய்ச்சியோர் துணிந்து கூறுகின்றனர்.

13. முடிவுரை:—மேற்கூறியவைகளால் இளங்கோவடிகளது சரித்திரத்தின் சிறப்பு ஒருவாறு விளங்கும். இவ்வடிகள் இயற்றிய அரும்பெருங்காவியமாகிய சிலப்பதிகாரத்தில் மறைந்துள்ள புராதன தமிழகத்தின் அரசியல் பத்தினிகளின் மேன்மை பழையகைத்தொழில் வியாபாரங்கள் தமிழர்வீரம் தமிழர்கடற்செல்கை தமிழரின்நகரநிர்மாணங்கள் நாடகத்தமிழிலக்கணம் இசைத்தமிழ்நூல்கள் பழையநூல்களின் பெயர்கள் அடிகளின் பாவசனசக்தி இன்னும் இவைமுதலிய பல விஷயங்களை இப்பொழுது விரிப்பின் இவ்வியாசம் பெரிதாமாதலின், தனித்தனியே அடிக்கடி தொடர்ந்தெழுதப்படும்.

V. T. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்,
Head Tamil Pandit, Maha Raja's College, PUDUKOTTAH.

தந்தைசொன்மிக்க மந்திரமில்லை.

[48-ம் பக்கத்தொடர்ச்சி.]

தந்தையாரானவர் தமக்குக் கிடைத்த அருமையான தின்பண்டங்களையும் குழந்தைகட்குத் தராது தின்னுதற்குச் சம்மதப்படுகிறதில்லை. தாம் தேடும் பொருளெல்லாம் தம்பிள்ளைகட்கு வேண்டுமென்றே சேமித்துவைப்பர். எண்ணும் எண்ணமெல்லாம் பிள்ளைகளின் சுகத்தைக் கருதியதாகவேயிருக்கும். இங்ஙனமாதலின் இவரபிமானத்திற்கு அளவேயில்லை. பன்றியானது பலகுட்டிகளை யீனுவதுபோற் பலபிள்ளைகள் வேண்டுமென்பதவசியமில்லை. ஒரே புத்திரனாகவிருந்தாலும் நற்குண நற்செய்கைகளுள்ளவனாக இருத்தல் வேண்டும். எல்லாத் தந்தைகட்கும் சற்புத்திரன் வாய்ப்பது அரிது. சற்புத்திரனைப் பெறாதார் தேகத்தில் வலுக்குறைந்து பிறகு நெடுநாளிவ் வுலகிலிருத்தல் கூடாது. இருப்பின் மிகுதியுந் துன்புறும்படி நேரும். சற்புத்திரனைப் பெற்றவர் எவ்வளவு காலமிருப்பினும், தப்புதல்வரால் பல்லாற்றானும் உபசரிக்கப் பெற்று மகிழ்வர் என்பதனையறிவித்தற்கே,

" அறுபதுக்கு மேலிருக்க லாகாதே ஆமாம்
பெறுநற் புதல்வனைப் பெற்றா—லிறுமளவும்
பாலுடனே யன்னம் பகிர்ந்தளிப்பா னப்பாலும்
மால்பதத்தில் வைக்கும் மகிழ்ந்து. "

என்னுஞ் செய்யுளெழுந்ததாகும். எல்லாநன்மைகளையுஞ் செய்து தன்னைப்பேணிய தந்தையின் சொல்லைக் கேளாத மைந்தன் எந்தவிதத்தானுய்தி பெறுவன்? உய்தி பெறுதல் ஒருநாளுமில்லை. தந்தை சுபநலங்கருதிக் கூறுவனவற்றையும், பிறவற்றையுந் தட்டாமற் கேட்டு நடத்தல்வேண்டும். தந்தையார், மைந்தன் நலங்கருதிக் கூறுவன பல உளவாயினும், முக்கியமாகப் படித்தல் வேண்டுமெனவும், படியாதவர் நித்த அநித்தக் கூறுபாடுகளையுணரும் உணர்வின்றி அகக்கண் குருடுபட்டவராவர் எனவும், வடிவழகினுங் கல்வியழகே யழகெனவுங்கூறுவர்; இதனை,

"மைந்தரேன் கல்வி வளனுணரா மாந்தரோவா
மந்தகரே யாவ ரவர்வடிவிற்—சந்தந்
தவழ் திரைகளார்த்தெழூஉந் தண்கடல்சூழ் வையத்
தவிழ்முருக்கம் பூவினிற மாம்."

என்பது உணர்த்தாநிற்கும். 'கற்கவேண்டியதவசியம்' எனக்கூறப்பட்ட சொல்லைக் கேளாதவன் நிலை இத்தகைத் தென்பதனை,

"கல்லென்று தந்தை கழற வதனையோர்
சொல்லென்று கொள்ளா திகழ்ந்தவன்—மெல்ல
எழுத்தோலை பல்லார்முன் நீட்ட விளியா
வழுக்கோலைக் கொண்டு விடும்."

என்பது உணர்த்தாநிற்கும். ஆகையால் நண்பர்களே! சிறுபிராயத்தினராக இருக்கும் நம்மைப் போஷிக்குநிலையிலிருக்கின்ற தந்தையார் சொல்வனவெல்லாம் நம் நன்மையைக் குறித்தேயாகும் என்பதனையுட்கொண்டு அவற்றைக் கேட்டு நடத்தலும், நாம் தக்க வயதுற்றவராகத் தந்தையார் முதுமைப்பருவ மெய்தியவழித் தந்தையாற் கூறப்படுவது சுபநலங்கருதியதே யெனினும், அதனையும் மறாது அன்புடன் கேட்டு நடத்தலும் வேண்டும். ஏனெனில், நாம் நம் தந்தையர்க்கு எவ்விதம் உதவி புரிந்தோமோ அவ்விதமே நம் புதல்வரும் நமக்கு உதவி செய்வரென்பது உறுதியாதலின் என்க.

யயாதி என்ற அரசன், சுக்ராசாரியரால், 'ஜயிக்கமுடியாத மூப்பைபடையக் கடவாய்' என்று சபிக்கப்பட்டுக் கிழப்பருவத்தை யடைந்தான். பின்னர் அந்த யயாதியின் வேண்டுகோட்கிணங்கி, 'இம்முதுமைப் பருவத்தை யாருக்கேனும்-அவர் வாங்கிக் கொள்வதாயிருந்தால்- கொடுத்து அவர்தம் இளமைப் பருவத்தை அவரிடமிருந்து நீ பெற்றுக்கொள்ளலாம்' என்று சுக்ராசாரியார் சொன்னார். யயாதி மகாராஜன் தன் புத்திரர்களைவரில் யது துர்வசு த்ருஹ்யு அனு என்னும் நான்கு புதல்வர்களையும் தனித்தனி அழைத்து, குழந்தாய்! 'மூப்பும் மடிப்புக்களும் நரைகளும் சுக்ராசாரியருடைய சாபத்தினால் என்னைச் சூழ்ந்திருக்கின்றன. நீ இந்த மூப்புடன்கூடத் துன்பத்தையும் பெற்றுக்கொண்டு எனக்கு

உன் யௌவனத்தைத் தாக்கடவாய். ஆயிரம் வருஷம் கழிந்த பின் யௌவனத்தை யுன்னிடங் கொடுத்துவிட்டு மூப்புடன் கூடத் துன்பத்தையுந் திரும்பப்பெற்றுக்கொள்ளுகிறேன்.' என்று கேட்க அந்நால்வரும் தனித்தனி மூப்பைப் பெற்றுக்கொள்ளவும் தம்மிடத்துள்ள இளமையைத் தரவும்முடியாதென்றும் மறுத்துவிட்டார்கள். இதனால் மனம் பொறாத யயாதி அந்நால்வருக்கும் சாபங்கொடுத்தான். அவர்களும் இருமை நலன்களையும் இழந்து வருந்தினார்கள்.

ஐந்தாவது குமாரனான பூருவைத் தன்சொல் மறாதவனென்று நினைத்து அவனிடஞ்சென்று; பூருவே! 'நீ எனக்கு அன்பனான புதல்வன். நீமிகச்சிறந்தவனாவாய்; குழந்தாய்! மூப்பும்மடிப்புக்களும் நரைகளும் சுக்ராசாரியர் சாபத்தினால் என்னைச் சூழ்ந்தன. யௌவனசுகத்தில் எனக்குத் திருப்தியாகவில்லை. பூருவே! ஜரையுடன் துன்பத்தை வாங்கிக்கொள். உன்வயதினால் போகங்களையனுபவித்து ஆயிரம் வருஷம் நிரம்பினதும் உன் யௌவனத்தைத் திருப்பிக் கொடுத்துத் துன்பத்தை ஜரையுடன் வாங்கிக்கொள்ளுகிறேன்' என்பதாகச் சொன்னான். இதனைக் கேட்ட பூருவானவன், யயாதி என்னும் தன் தந்தையை மகிழ்ச்சியுடன் பார்த்து, மகாராஜாவே! 'நீர் எதைச் செய்யச் சொல்லுகிறீரோ அதைச் செய்வேன்; நீர் எதுவரையில் விரும்புகிறீரோ அதுவரையில் உமது ஜரையை வகிப்பேன்.' என்று ஜரையை வாங்கிக்கொண்டு தன்னிளமையைப் பிதாவுக்குக் கொடுத்தான். பிதிரு வாக்யத்தை மந்திரோபதேசமெனக்கொண்ட பூருவுக்கு ஆயிரம் வருஷங்கள் கழிந்தவுடன், யயாதி தான் பெற்ற இளமையைத் தன் புதல்வனுக்கு மீளக்கொடுத்தான்! தன் இராஜ்யமுழுவதையும் அரசாளும்படி கொடுத்தான். 'புத்ரபௌத்ரபாரம்பர்யமாகக் கீர்த்தியுடன்வாழக்கடவாய்' என்று மனப்பூர்வமாக ஆசிர்வதித்தான். அன்பர்களே! ஆதலால் நாம் நம் தந்தையர் கூறுவனவற்றை யன்புடன் கேட்டு அவற்றின்படி நடப்பின் எல்லா நலமுமெய்தி வாழலாமென்பது நிச்சயம். சுபம்.

மணிவாசகன்.

இந்திய புத்திரிகளுக்கு ஓர் விக்ஞாபனம்.

ஸகோதரிகளே!

இக்காலத்தில் நீங்கள் கூர்ந்து உணரவேண்டியது ஒன்றுண்டு! அதாவது, ஸ்திரீகளுக்கு அன்பு மிகுதி; புருஷர்களுக்கு ஞானம் மிகுதி; ஆனாலும், ஸ்திரீ புருஷர் ஒவ்வொருவருக்கும் இரண்டும் அதி அவசியம்; புருஷர்களுடைய தர்மத்தைக் கூடவிருந்து முன்செலுத்துவதற்கேற்ற ஞானம் ஸ்திரீகளிடத்திலும், பெண்மக்களிடத்தில் கௌரவபுத்தி கொள்ளத்தக்க அன்பு புருஷர்களிடத்திலும் தற்காலத்தில் மிகக்குறைவு. ஒரு குடும்பத்தில் ஸ்திரீ புருஷர் இருவரும் ஒற்றுமையாயிருக்கவேண்டியது போலவே, ஒரு தேசக்ஷேமத்திற்கும் இன்றியமையாதது, அத்தேசத்து ஆண் பெண்மக்களின் ஒற்றுமையேயாம். நமது இந்தியாவின் அபிவிருத்தியை ஒரு ரதத்திற்கு ஒப்பிடுவோமானால், நீவிரும் நாமும் அதற்கு அவசியமான இரண்டு சக்கரங்களாவோம். ஒற்றைச்சக்கரம் மட்டும் பயன்படாது. இதுதான நீவிரும் நாமும் அறியவேண்டிய உண்மை.

இக்காலத்தில் ஓர் தவறான எண்ணங்கொண்டிருக்கிறோம். இது, ஜன்மாந்தரங்களைப்பற்றிய உண்மையை ஊன்றியறியாததால் வந்த வினை. இப்போது புருஷர்களாயிருப்பவர் பலர் அநேக முன்ஜன்மங்களில் ஸ்திரீகளாயிருந்து, ஸ்திரீசுபாவத்தையே அதிகமாய் விருத்திசெய்திருக்கிறார்கள். அதனால்தான் சில ஆண்மக்களிடமுங்கூட, காம்பீர்யம் அதிகமாய்ப்பிரகாசியாமல் கருணையும் அச்சமும் கூச்சமும் வெட்கமுமே மிகுதியாய் விளங்குவதைக் காண்கிறோம். இவர்களை ஸங்கீதம் கவித்வம் நாடகம் முதலிய கலைகளிற் படிப்பித்தல் தான் தகும். இவர்களுக்கு இயற்கையாகவே இவைகளில் ஓர் நாட்டம் இருக்கும். பரோபகாரங்கருதி உழைக்க இவர்கள் தளரார். அன்பின் வழிபற்றியே இவர்கள் செல்வர். தத்துவமும் தர்க்கமும் இவர்களுக்கு ருசியாயிரா.

அநேக பூர்வஜென்மங்களில் ஆண்மக்களாயிருந்து இப்போது பெண் வடிவத்திலிருப்போரையும் பார்ப்போம். நல்ல மனோவல்லமையையும், தர்க்க தத்துவ பௌதிக சாஸ்திரங்களில் தீவிர நாட்டத்தையும் இவர்களிடம் காண்போம். பிறர் தம்மை எவ்வாறு கருதினாலும் தாம் நீதியெனக்கண்ட வழியில் பயமின்றி இவர்கள் செல்வார்கள். ஸ்ரீ ஹெலினாம்பாளம்மையார் ஸ்ரீ பெசண்ட் அம்மையார் ஸ்ரீ ஸரோஜினி தேவியார் இவர்கள் இதற்குச்சான்றுவர். ஆகவே சரீரவேறுபாடுகளைக்கருதாது ஸ்வபாவங்களில் ஒற்றுமையையும் கவனிப்போமானால், உலகத்தில் ஸநாதன தர்மம் நிலைக்கும்.

நாம் ஒவ்வொருவரும் அன்பையும் ஞானத்தையும் நம் சித்தில் நிறைய அமைத்துக் கொள்ளல்வேண்டும், அன்பை யிழந்த ஞானமும் ஞானத்தை யிழந்த அன்பும் பயனற்றவை. இது மட்டுமோ? தீமையுமல்லவோ விளைக்கின்றன! எப்படி என்று பார்ப்போம்:—ஐரோப்பிய யுத்தத்தில் அரும் பெருங் காரியங்களை சாதிக்கக்கூடிய மஹா புத்தி பராக்ரமசாலிகள் தம் ஞானத்தையும், சக்தியையும் எப்படி உபயோகிக்கிறார்கள்? ஒரு க்ஷணத்தில் பதினாயிரம் கணக்கான ஜனங்களைக் கொல்லும் வழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அன்பிழந்த ஞானம் கொடும் பகையாயிற்று. அங்ஙனமே ஞானமிழந்த அன்பும் துவேஷமாகவும் குருட்டு பக்தியாகவும் விளையும். எப்படியெனில்:— "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்" என்னும் உண்மையை நம்மில் பலர் அறிகிறோமில்லை. அறிவோமானால், நம்மையும் நம்பிள்ளைகளையும் நம் பந்துக்களையும் நாம் எவ்வளவு உயர்வாய் மதிக்கிறோமோ, அப்படியே பிறருடைய அவரவர் பிள்ளைகளும் பந்துக்களும் உயர்வு என்று உணர்வோம். அப்போது எல்லோரையும் ஸமமான அன்போடு கருதுவோம். இது இல்லாததால் நமது குழந்தைகளை நேசிக்க எண்ணி, பிறர் குழந்தைகளிடத்து அருவருப்பு கொள்ளுகிறோம். ஞானமில்லாமல் அன்பு செலுத்தத் தொடங்கித் துவேஷத்தைக் கொள்ளுகிறோம், எது எக்காலத்திலும் அழியாத ஸத்தியமாயுள்ளதோ, அதை யறிவதுதான் ஞானம். அதனிடத்துப்பிரியங்கொள்வதுதான் அன்பு. ஸத்தியத்தைத் தழுவாத அன்பும் ஞானமும் முரண்படும்; சிதைந்துபோம். அன்பும் ஞானமும் ஸத்தியத்தைத் தழுவாமல் முரண்படவே, உடலையும் உருவத்தையும் பெரிதாக நினைக்கிறோம். உயிரையும் குணத்தையும் கவனிக்கிறோமில்லை. வெளி டம்பத்தைக் கண்டு மயங்குகிறோம். உள்ளத் தூய்மையை அசட்டை பண்ணுகிறோம். அதனால் உலக வாழ்வு ஈசுவர கைங்கர்யமாய் நிகழாமல், உண்பதும் உறங்குவதுமாக முடிகிறது. இப்படிச் சீர்குலையும் காலங்களில்தான் பகவான் அவதரிப்பதாக கீதாசாஸ்திரம் கூறுகிறது. அதாவது, "தருமம் அழிந்து அதர்மம் ஓங்கும் போதுநான் அவதரிக்கிறேன்" என்பதேயாம். தற்கால யுத்தத்தை தர்மாதர்ம யுத்தமென்று நாம் எங்ஙனம் கூறாமலிருப்பது? இக்காலத்தில் ஞானம் அபிவிருத்தியாகி யிருப்பதற்குத் தக்கபடி உலகத்தில் அன்பு இல்லை. நமக்குத் தெரிந்தமட்டில் பிறருக்குக் கற்பிக்கவேண்டுமென்ற அன்பும் நாம் கற்றுக் கொண்டதற்குத் தக்கபடி நேர்மையாய் நடக்கத் தீவிர பக்தியும் இப்போது நம்மவருள் மிகத்தேவை. எல்லோரிடத்தும் ஸகோதர பாவமான அன்பு கொள்ளவேண்டுமென்று நாம் எவ்வளவு நன்றாயறிந்தாலும், நக்கண்ணுக்குப் பிரியமான ரூபவான்களிடத்திலும் ரூபவதிகளிடத்திலும் மட்டும் அன்பு கொள்கிறோமே யொழிய, மற்றவர்கள் எவ்வளவு நற்குணம்பொருந்தியவர்களாயிருந்தாலும், அவர்களைக் கவனிக்கிறோமில்லை.

நம்தேசத்து ஸ்திரீ புருஷர்களாகிய நாம், பரஸ்பர சௌஜன்யத்தோடு ஒருவரையொருவர் நன்குமதித்து ஒருங்குசேர்ந்து நம்தேசத்துப் பொதுநலம் ஒன்றிற்கேனும் உழைக்க முன்வாராத இக்காலத்தில், கருணைக்கடலான ஸ்ரீகிருஷ்ணபகவான் அவதரிப்பாரானால், அவரைநாம் அறிந்து நன்குமதிக்கமுடியுமா? "லோகாநுக்கிரஹத்திற்கு அவர் புருஷ ரூபமாகத்தான் வருவார்; ஸ்திரீ ரூபமாக வரமாட்டார். ஸ்திரீ ரூபமாக வருவார்; புருஷரூபமாய வரமாட்டார்" என்றும் நாம கருதல் நியாயமோ? ஒரு மஹாபுருஷன் வந்தால், அவருக்கு ஸ்திரீயென்றும் சூத்திரனென்றும் பேதபுத்தி இருக்குமோ? "ஸ்திரீகளும் வைசியர்களும் சூத்திரர்களும் என்னையடையத் தகுந்தவர்கள்" என்று பகவான் கூறியிருக்கிறாரே. ஸ்திரீ ரூபமாய்ப்பகவான் வந்தால் புருஷர்கள் அவரையணுகி அவரைவணங்கி அவர் ஆக்ஞைப்படி நடக்கவும், புருஷ ரூபமாகப்பகவான் வந்தால், ஸ்திரீகள் அவரையணுகிஅவரை வணங்கி அவர் ஆக்ஞைப்படி நடக்கவும் ஏற்றவிதமாய் நம்தேசத்தில்ஸ்திரீபுருஷர்களுக்குள் அந்யோந்யமான முறைமை நிகழ்கிறதென்று நாமசொல்லமுடியுமா? புருஷர்களுக்கு இக்காலத்தில் பக்தியே அழிந்துபோயிருக்கிறது. ஸ்திரீகளாகிய நீங்கள் பக்திரசத்தை அறிவது போலப் புருஷர்களுக்குஅறியச்சக்தி கிடையாது. இக்காலத்திலும் பகவான் வருவதாகப் பிரஸ்தாபமுள்ளது. உலகப்போராட்டத்தை நிறுத்தவும் அவர்வரவை வேண்டுகிறோம். ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில்கோபஸ்திரீகள் எத்தகைய உள்ளுணர்வோடு பகவானுடைய பெருமையைப் பிரகாசப்படுத்தி வந்தனரோ, அத்தகைய உள்ளுணர்வோடு இக்காலத்திலும் பகவானுடைய அவதாரத்தை ஆவலாய் எதிர்பாருங்கள். முற்காலத்தில கோபஸ்திரீகள் விதைத்த பக்தியே இக்காலம்வரை, உலகத்தில் நிலைத்திருக்குமானால், அவ்விதபக்தியை இக்காலத்திலும் நீங்கள் பிரபலப்படுத்த என்னதடை? இனி வெகுகாலம்வரை உலகில்பக்தி நிலைத்திருக்க நீங்கள் விதை ஊன்றுவது உங்கள் பாக்கியமல்லவா? ஸர்வதர்மங்களையும நாம் அறியாவிட்டாலும், அவதாரமூர்த்தி வருங்காலத்தில் அவரிடம் பக்தியை மட்டும் எல்லோரும கொள்வார்களானால் அதுவேபோதும். அதன் மூலமாய்த் தர்மங்களைத் தெரிந்துகொள்வோம. "அநந்யபக்தியால் மட்டுமே என்னையறிய முடியும்" என்று ஸ்ரீகிருஷ்ணர் கீதையிற் கூறியபடியே, ஸ்ரீகிருஷ்ணனுடைய பெருமையை இடையர்களுக்கு இடையப்பெண்கள் தாம் அறிவுறுத்தினரென்று கேட்டிருக்கிறோம். அதேமாதிரி இக்காலத்திலும் வரப்போகும் பரமாசார்யனிடம், ஆண்மக்கள் அனேகருக்கு பக்தியில்லை. உங்கள் மூலமாகத்தான் அவர்களுக்கு பக்திபெருகவேண்டும். ஸ்திரீகளுடைய நிஜபக்திக்குப்பகவான் மிகவும் கட்டுப்பட்டவர். பகவான் திரௌபதிமானசம்ரக்ஷணம் செய்யவில்லையா? பகவான் உலகில் உதித்து, ஸங்கடங்களைத் தீர்த்துச் சமாதானத்தை நிலைபெறச்செய்யும்படி தீவிரமாய்ப்

பிரார்த்தியுங்கள். அவர் நிச்சயம் வருவார். கோபிகைகளின் சங்கமொன்று முற்காலத்தில் ஏற்பட்டிருந்தால், இப்போதும் உங்கள் பக்திக்குரிய போதச் சங்கமொன்று அவசியமல்லவா? பூர்வஜன்மங்களில் ரிஷிகளாயிருந்தவர்கள் கோகுலத்தில் ஸ்திரீகளாய்ப்பிறந்தார்களென்றால், இக்காலத்திலும் அத்தகைய புண்யாத்மாக்கள் ஸ்திரீகளாகிய உங்களுக்குள் இல்லையென்று எவர் மறுப்பார்? எத்தனையோ அரியரத்தினங்கள் ஸமுத்திரத்திற் புதைந்து கிடப்பனபோல, உங்களுக்குத்தக்க கல்வி ஏற்படாமையால் உங்களிடத்திலுள்ள நக்ஷத்திரம் பிரகாசிக்க முடியவில்லை. உங்கள் கல்விக்கு நீங்களே முயலவேண்டுமல்லாது வேறொருவர் உங்களுக்காக கற்க முடியாது.

உங்களுக்குப்பக்திமயமான கல்வியைப் புகட்ட, உதயதிசை நக்ஷத்திர சங்கம் நம் இந்தியாவிற்கு ஓர் பெரும் பாக்கியமாகவுள்ளது. இதற்காகவுள்ள ஆண்டுப்பத்திரிகைகளைப் படித்து இச்சங்கத்தின் நோக்கங்களையும் உயர்வான பிரயோஜனத்தையும் ஜனங்களுக்குள் பரவச்செய்து, இதைப்படிக்கும் ஒவ்வொரு சகோதரியும் தம் அருகாமையில் ஒரு சிறு நக்ஷத்திரக்கிளைச்சங்கத்தை ஏற்படுத்தி வருமாறு வேண்டுகிறோம். ஒரு தெருவிலுள்ள நாலைந்து வீட்டுக்கு ஒரு சங்கம்வீதம் கூட்டல் ஏற்படவேண்டும். வீண் வம்பைத்தவிர்க்கவும் பிறர் குற்றத்தை மறக்கவும் மன்னிக்கவும் பிறரிடத்து அன்போடு நடக்கவும் பழகுமின். எவரிடத்திலும் அணுவளவாவது ஒரு நற்குணத்தைக்கண்டு அதை நாம் அடையும்படிக்கும் எல்லாவற்றிலும் நம் சொந்த பிரயோஜனத்தையே பெரிதும் பாராட்டாமல் நாளுக்கு நாளதிகமாய் எத்தனை விஷயங்களில் பிறர்க்கு உபயோகமாயிருக்கலாமென்பதையும் தெரிந்து நடக்க முயலுங்கள். ஸ்ரீ பெஸண்ட் அம்மை எப்படி உழைக்கிறார் பாருங்கள்.

அதற்குச்சாதனமாக, அருகாமையிலுள்ள நாலைந்து வீட்டுப்பெண்மக்கள் ஒருவர் வீட்டில் பிரதிதினமும், சாவகாசமான ஒருகுறித்த நேரத்தில் அல்லது வாரமொருமுறையாவது குறித்த சமயத்தில் கூடி, அமைதியாயும் சாந்தமாயும் ராமாயணம் பாகவதம் முதலியவைகளைத் தமிழில் படிப்பதோடு அவைகளின் ஸாரங்களையும் படிப்பினைகளையும் சிந்தித்தறியலாம். நமது பூர்ணசந்திரோதயம் முதலியபலபத்திரிகைகளை வருவித்து, நம்தேசத்தின் தற்காலநிலைமையையும் அதில் அவதாரமூர்த்தியைப்பற்றி எழுதப்படும் வியாசங்களையும்படிக்கலாம். சந்தேகங்கள் உண்டானால் எம்மைப்போன்றவர்கட்கெழுதினால் எமக்குத்தெரிந்த அளவு தெளிவிக்கத் தயாராயிருக்கிறோம். இப்படிக் கிராமங்கள் தோறும் தெருக்கள் தோறும் ஸ்திரீகள் அனைவோரும் ஒருமித்து இவ்வுதயதிசை நக்ஷத்ர சங்கத்தை ஏற்படுத்தி நடத்திவருவார்களானால், நம் இந்தியாவில் புதிய

விளக்கேற்றிவைத்த மாதிரி பிரகாசம் ஏற்படும். ஞானமணம் கமழும். லக்ஷ்மியும் சரஸ்வதியும் நம் இந்தியத்தாயோடு ஒருமித்து வாழ்வார்கள்.

“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு”

என்று திருவள்ளுவர் எழுதியுள்ள பிரகாரம், எவ்விடத்திலும் நல்லோரை உபசரிக்கத்தக்க ஸ்திரீ சங்கங்கள் ஏற்படவேண்டும். எவர் சொல்வதையும் கேட்குமுன் தள்ளிவிடலாகாது; கேட்குமுன் அங்கீகரிக்கவுமாகாது.

உங்கள் பேதைமைக்குணம நல்லதேயானாலும் அறிவின்மையைகண்டிப்பாய் தவிர்க்கவேண்டும். உங்கள் பூரணபக்தியையும் தைரியத்தையும் கொண்டு அறிவின்மையை விலக்கவேண்டும். உண்மைப்பரோபகாரிகள் இன்னாரென்று அறிந்து அவர்களுடன் ஒத்து உழைக்கவேண்டும். அவர்களை ஆதரித்து ஆடம்பரங்களைத் தவிர்க்கவேண்டும் பழத்தின் ருசியைக்கொண்டு மரத்தின் யோக்கியதையை நாம அறிவதுபோலப்பரோபகாரம் என்னும் ஒரே குறியை முன்வைத்து இன்னார் பெரியோர் என்று அறியலாம். அப்படி அறிந்த க்ஷணமே நீங்கள் அவருடன் ஒத்துஉழைக்க முன்வரவும் வேண்டும். பர்த்ருஹரி சொல்லியபடி உலகத்தின் நீதிநிபுணர்கள் தங்களைப் புகழ்ந்தாலும் இகழ்ந்தாலும ஐஸ்வரியம்பெருகினாலும் குறைந்தாலும் இன்று மரணம் வரக்கூடியதாயிருந்தாலும் அல்லது ஒரு யுகம் கழித்துதான் மரணம் வருமென்றாலும், நியாய முறையினின்றும் ஒரு மயிரிழை கூடத்தீரர்கள் விலகமாட்டார்கள். இதை உங்கட்குச்சொல்வானேன் என்றால், நியாயவழியிலசெல்வோருக்கு அபரிமிதமான இடையூறுகள் அவசியமவரும். அவைகளை அலக்ஷியமாய் எதிர்க்கவேண்டும். இத்தகையசீலமில்லாதவர்கள் பிறர்க்குஒருபோதும் உபயோகமாய்வாழ இயலார் ஆகவே, நம்தேசத்து ஜயசீலர்களும் ஜயவீரர்களுமான தற்கால முற்காலத்து ஸ்திரீபுமான்களின் சரித்திரங்களைப் படிப்பீர்களானால், உங்கள் மனோபாவத்திற்குத் தக்கபடி இனி நம்தேசத்தில் பிறக்கும் ஜீவர்களை ஒளி நிறைந்த நக்ஷத்திரங்களாய்ப் பிரகாசிக்கத்தக்க சரீரங்களைக் கொடுக்க வல்லவராவீர்கள். உங்கள் தலைமைக்குத்தக்கபடி ஏதிதளவாவது இதில் உதவுவீர்களானால், அது பகவானுக்குச் செய்த கைங்கர்யமாகும்.

“சீவனென்னச் சிவனென்ன வேறில்லை” என்னும் திருமூலர் வாக்குக்கிணங்க, ஜீவர்களின் க்ஷேமத்திற்கு நாம் உழைப்பதே ஸ்வாமியினுடைய சித்தத்தை யறிந்து உழைப்பதாகும்.

ஸ்திரீகளுக்கு மெத்த பூர்ணசந்திரோதயம் அமைச்சக்தா விகிநந்தியிந்துக் கொடுக்கப்படும். இம்மாதிரிப் பத்திரிகைகளை வேண்டுவோர் தம்மாலியன்ற எவ்வளவுத்தொகையாவது எமக்கனுப்பினால், அதற்குத்தக்க துண்டுப்பத்திரிகைகள் அனுப்பப்படும். அவைகளைப் பிறர் பலருக்குக்கொடுத்து நம் சங்கத்தைப் பரவச்செய்யலாம்.

தங்கள் சகோதரன்,

B. S. ராமசுப்பையர்,

காரியதரிசி.

உதயதிசை நக்ஷத்ர சங்கம், மதுரை.

மதுராஸ் யுத்தநிதி ஸ்டாம்பு.

ஹிஸ் எக்ஸெலென்ஸி பென்லண்டுப்பிரபு அவர்கள் மதுராஸ் யுத்தநிதித்தலைவர் என்னும் முறைமையில் மதுராஸ் யுத்தநிதி ஸ்டாம்பு சமீபத்தில் வெளியாகுமென்றும் விற்பனைக்குக் கொடுக்கலாகுமென்றும் அறிவிக்கும்படி எம்மைக் கேட்டுக்கொண்டனர்.

மதுராஸ் சித்திரவேலைகலாசாலை சூபரின்டென்டெண்டு W. S. ஹாட்லே அவர்களால் அந்த ஸ்டாம்பு குறிப்பெழுதப்பட்டது. அதில் "மதுராஸ்" என்னும் புகைக்கப்பல் செல்வதைக் காட்டியிருக்கிறது. உச்சிப்பக்கம் மத்திய பாகத்தில் "மதுராஸ் வார் பண்டு" என்று வரைந்திருக்கிறது. உச்சிமூலை ஒவ்வொன்றிலும் லைப்பாய் என்று சொல்லப்படும் மிதப்பு ஒன்றும் கீழ்ப்பக்கம் மூலையொவ்வொன்றிலும் செவட்புச் சிலுவை யொன்றும் போடப்பட்டிருக்கிறது. கீழ்ப்பக்கம் மத்திய பாகத்தில் "அரை ½ அணா" என்று எழுதப்பட்டுள்ளது.

ஸ்டாம்பு செய்வதற்கான அச்சு முத்திரைகள் ஹைதராபாத் ஸமஸ்தானத் தங்கசாலையில் செய்யப்பட்டுள்ளன. ஹிஸ் ஹைனஸ் நிஜாம் அவர்கள் தர்மத்தில் ஸ்டாம்பு இனமாக பதிப்பிக்கப்படுகிறது.

கையொப்பம் செலுத்துகிறவர்கள் பொருட்டாக ஹிஸ் எக்ஸெலென்ஸி யவர்கள் பம்பாயில் செய்யப்படுகிறதுபோலவே, மதுராஸிலும் முகாமையான சகலஷாப்புகளிலும் தொழிற்சாலைகளிலும் இந்த ஸ்டாம்புகளை விற்பனைசெய்ய முயற்சி பண்ணுவார்களென்று எதிர்பார்க்கின்றனர். பம்பாய் ராஜதானி யுத்தஸஹாய நிதிக்கு அவர்களுடைய ஸ்டாம்பு விற்பனையிலிருந்து ஏற்கனவே லக்ஷரூபாய்க்குமேல் கிடைத்திருக்கிறது. பம்பாயில் ஏற்பட்டிருக்கும் அனுகூலமானது இந்த ராஜதானியிலுள்ள ஒவ்வொருவருக்கும் பம்பாயில் செய்யும்

முயற்சியைக்காட்டிலும் அதிக முயற்சி செய்யவேண்டுமென்று ஊக்கம் உண்டு பண்ணவேண்டும். ஸ்டாம்புகள் செய்வதற்கான செலவு முழுமையையும் பம்பாயிலுள்ள வர்த்தகக்கூட்டத்தார் தாங்களே போட்டுக்கொண்டனர். ஸ்டாம்பும் வெகு உதாரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒரு ஷாப்புமாத்திரம் ரூ 950-க்கு ஸ்டாம்பு விலைக்கு எடுத்துக்கொண்டது. மற்றொரு ஷாப் கப்பலில் சாமான்கள் அனுப்பும்படி தாங்கள் எழுதும் கடிதங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு ஸ்டாம்பு ஒட்டுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறது. அநேக ஷாப்புகள் ஸ்டாம்பைக் குறித்த விளம்பரங்களை அவைகளனுப்பும் கடிதங்களுடன் வைத்தனுப்பின. கடைகள் கிளப்புகள் ஹோட்டல்கள் முதலிய எல்லா இடங்களிலும் ஸ்டாம்புகள் விற்கப்படுவதுடன், பெரிய பிரசித்தப்பத்திரிகைகளும் விளம்பரப்பத்திரங்களும் கொடுக்கலாயின. ஸினிமடோகிராப் வைத்திருப்பவர்கள் காக்ஷி நடத்தப்படும் ஒவ்வொரு சமயத்திலும ஸ்டாம்பு விற்கிறார்கள். சமாசாரப் பத்திரிகைகளெல்லாம் ஸ்டாம்பு விற்பனையை அதிகப்படுத்த இயன்றமட்டும் பிரயாசைப்படுகின்றன. ஒவ்வொருவரும் அந்த ஸ்டாம்பை வாங்கித்தாம் எழுதும் கடிதங்களுக்கு முகர் மாதிரி உபயோகப்படுத்தினால் உதவிபுரியலாம்

ஸ்டாம்புகள்-3½ ஸ்டாம்புகளடங்கிய புஸ்தகங்களாகச் சேர்த்து விற்கப்படும். இம்மாதிரியான ஸ்டாம்பு புஸ்தகம் மதுராஸ் கவர்ன்மெண்ட் ஹவுஸிலிருக்கும் மதுராஸ் யுத்தபண்டு ஆனரெரி செகிரிடரியிடம் விலைக்கு கிடைக்கும்.

ஸ்டாம்புகள் மதுராஸ் வார் பண்டைச்சேர்ந்த 'லேடீஸ் டெப்போ' வின் லோகல் செகிரிடரிகளிடத்தும் விலைக்குக் கிடைக்கும், செகிரிடரிகள் ஏற்கனவே நிதிசேகரஞ்செய்தவரும் உதவியோடு இந்தக்காரியத்தையும் அன்புடன வகிக்கும்படி ஹிஸ் எக்ஸலென்ஸி கேட்டுக்கொள்ளலாயினர்.

ஸ்டாம்பு வந்துசேர்ந்தவுடன் அதைக்குறித்து கிரமப்படி பிரசித்தம் செய்யப்படும். அப்போது ஸ்டாம்புப் புஸ்தகங்களுக்காக வரும் விண்ணப்பங்கள் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆனால் இந்த ஸ்டாம்பை தபால் தலையாக உபயோகிக்கலாகாதென்று எல்லாரும் நன்றாய் அறியவேண்டும். கடிதம் எழுதுகிறவர் ஸ்டாம்புவாங்கி உபயோகிப்பதனால், தாம்யுத்தபண்டுக்குக் கையொப்பம செலுத்துகிறாரென்று காட்டுவதற்கான முத்திரையாக மட்டில் ஒட்டி உபயோகிக்கலாம். இவவிதம செய்வதினால இந்த ராஜதானி முழுமையிலும் இந்த ஸ்டாம்பைப்பற்றியும் யுத்த பண்டைப்பற்றியும் அவர் பிரசித்தம் செய்கிறதாகும்.

(ஒப்பம்) எல். எம். பீட், கப்தான்,
ஆனரரி செகிரிடரி, மதுராஸ் யுத்தநிதி ஸ்டாம்பு.

V. R. LURAI RAJAH—For Darbar.

ஓர் சந்தேகவினா!

பற்பல நாவலர் பண்டிதமணிகாள்!

இந்நிலவுலகின்கண் சாட்சுஷ்ய பரிபூரண காஷ்டமாய்ப் பரப்பிரமத்தின் திருவடிப்பிராகலோக பிராணிகள் படைக்கப்பட்டன. அவற்றுள் மிகையும் உயர்வாயது மானுடப் பிறவியேயாம். அதனுள் பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென நால்வருணத்தோருளர். இவற்றுள் சூத்திரவருணத்தைப்பற்றி நாகரீகமுண்டாகிய ஜாதிகளெல்லாவற்றையும் முறையே வகுத்துத் தமிழ்நாட்டின் மூலத்தமிழ்ப்பெயருக்குப் புலப்படுமாறு பெரியோர்கள் வெளியிட்டுள்ளார்கள். இஃதன்றி நலமாக ஓர் மயக்கமைப் படுகின்றன. அஃதென்னவெனின்:-சைவஜாதியேயாம், அச்சாதியானது ஏனைய ஜாதிகளைப்போன்று கிரியையை முன்னிட்டு வந்ததா, அல்லது செய்கையை முன்னிட்டு வந்ததா என்பதைப்பற்றிய பகுதியும் விடையுடையோனுகலான இதனை எழுதியுள்ளேன். அறிஞர்களாகிய மணிகளாகிய பண்டிதர்கள் நன்கு புலப்படுமாறு மெது பாதுவின் வாயிலாய் எழுதுவீர்களாக.

இங்ஙனம்,

பாலகவி, **K.** நல்லையஆசாரி.

சகலகலாவல்லி விலாஸ் இராயபுரம்.

விளம்பரம்.

நம் செந்தமிழ் நூல்கள் வெளிவருதலையும், பிராசீனவாசகர்கள் யறிந்தொழுகுதலையும் கருதி சங்க நூல்களாகிய பதினெண் கணக்குகளுளொன்றாகிய 'ஆசாரக்கோவை' என்னும் நீதிநூல் பலவான்குடி சித்திவிநாயக வித்தியாசாலையின் முதற்பிரசுரமாக ஸ்ரீமாந் மு. மு. வீர. வீரப்பசெட்டியாரவர்களின் பொருளுதவியால் மாணவர்கட்கு விலையின்றிக் கொடுக்க அச்சிடப்பெற்றுத் தயாரிலிருக்கின்றது. வேண்டுவோர் தபாற்செலவுக்காக புத்தகம் ஒன்றுக்கு அரையணாவீதம் தபால் முத்திரையனுப்பி ஷை வித்தியாசாலைத் தலைவர் ஸ்ரீமாந், ராம. கு. ராம. இராமசாமிச் செட்டியாரவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்.

சண்முகநாதன்.

ஸ்ரீமான் சடையப்பவள்ளலாரது சரித்திரத்தில் ஒருபகுதி.

(தொண்டைமண்டல சதகம்)

"தெள்ளத் தெரிந்தவர் செய்தக்க தோர்முறை செய்யிலையா
வெள்ளத் தனைமலை யத்தனை யாமென்ப தின்றறிந்தோ
முன்னற் கரிய தொடையாடை கீறிய தொன்றுமொரு
வன்னற் றகைமையொ டொத்துள தாற்றொண்டை மண்டலமே"

பொழிப்புரை.

நூல்களைக்கற்றுத் தெளிந்த அறிவுடையோர், தாம்செய்யத் தகும் செயல்களில் ஒன்றை அவ்வளவாக விசம்பரச்செய்யாமல் ஒரு வகையாற்சிறிது செய்யினும், அது எள்ளத்தனைச் சிறிதாயினும், பிறர்க்கு மலையத்தனைப்பெரிதாகும். எங்ஙனமெனில், வெண்ணெய் நல்லூர்ச் சடையப்பமுதலியார் அரசன் சமூகத்தில் விலையுயர்ந்த தனது துடையாடையைக் கிழித்த இச்சிறு செயலிலேயே கண்டோம். அவர் செய்த அச்சிறு செயல் அரசனும் பிரமிக்கத்தக்க பெருஞ்செயலாயிருந்தது. இத்தகைய வேளாண்குடிமைபளை யுடையது தொண்டைமண்டலம்.

வரலாறு.

வடநாட்டு வணிகனொருவன் முடிபுனைந்த அரசர்க்கேற்றதாக உயர்ந்த விலையில் அரியவேலைப்பாடமைந்த பட்டாடையொன்றைச் சோழன்பாற்கொண்டு சென்றான். சோழன் அப்பட்டாடையின் அருமை பெருமைகளைக்கண்டு பெரிதும் களித்து, அதனைப் பெறுவான்கருதி விலைகேட்டனன். அதற்கு வணிகன் கூறியவிலை, தன் பொக்கிஷத்திலுள்ள பொன்னினும் பதின்மடங்கு அதிகமாய் இருந்ததுபற்றிப் பெறற்கியலாதவனாகி வணிகனைச்செலவிடுத்தனன்.

விடைபெற்ற வணிகன், அப்பெரும்பட்டினைப் பெறற்குரிய பிரபுக்
கள் வேறெவருளாரென விசாரித்தபோது, 'திருவெண்ணெய்
நல்லூர் சடையவள்ளலே இப்பட்டினைக்கொள்ளற்குரிய பெரும்
பிரபு' வென்று, நாடுமுழுதும் ஒருங்கே புகழ்தலைக்கேட்டு, அப்
பிரபுவைக்காண்பதற்கு வெண்ணெய்நல்லூர் சென்று, அச்சீமா
னிடத்து அவ்வரிய பட்டினைக்காட்டி, நிகழ்ந்த விஷயத்தையும்
உரைத்தனன். பிரபு, பெரிதும் மகிழ்ந்து அதனைப்பெறுவதில
பேராவல்கொண்டு, அப்பட்டின் மேம்பாட்டையும் நுண்ணிய
வேலைப்பாட்டையும், ஆடைசெய்தானின் அரியபுத்திகூர்மையையும்
சிந்திக்குமிடத்து, வணிகன் கூறியவிலை மிகு கொஞ்சமேயாமென்று,
தனது பெருநிதிபறையினின்றும் அதன் உயர்ந்த விலையை எளி
தாகத்தந்து, வணிகனைவழிவிட்டனன். இதன்மேற் சோழன், ஓர்
நாள், சடையவள்ளலிடத்து சில விஷயங்களைப்பற்றிச் சம்பாஷிக்க
நினைந்து, அழைத்துவருமாறு தனது தூதனைவிடுத்தபோது, அவ
வள்ளல், தனக்குத் தொடையில் புண்ணுண்டாயிருப்பதால் இச்
சமயம் இராஜசபைக்கு வருவதற்கு இயலாதென்றும் அதுதீர்ந்து
குணமடைந்ததும் வருவதில் தடையிராதென்றும் தூதனிடத்தில்
பதில் விடுத்துக், குணமடைந்தசிறிதுநாளில் கூறியவாறுசோழனைக்
காணச்சென்றார். சோழன் தன்னாலுங்கொள்ள முடியாதவொரு
பெருவிலைப்பட்டைச் சடையவள்ளலின் அரையிற்கண்டு, வியப்பும்
அழுக்காறுங்கொண்டு அகத்தால் நொந்து முகத்தாலுபசரித்து,
தொடையிலெழுந்த புண் தீர்ந்து முற்றிலுங் குணப்பட்டதோ, எவ்வித
மிருக்கிறது? நான் அதைப்பார்க்க விரும்புகிறேன் என்று வெகு
கனிவாகக்கேட்டனன். அதுகேட்ட வள்ளல், உடுத்த ஆடையை
நீக்கித்தொடையைக் காட்டுதல் மரியாதைக்குறைவெனக் கருதி,
தான் பெருவிலை கொடுத்துப்பெற்ற அப்பட்டாடையை புண்ணுள்ள
இடத்துக்குநேரே கையாற் கிழித்துக்காட்டினர். அது கண்ட
அரசன், "எமக்கரியதாய்த் தன் செல்வமிகுதிதோற்றற்குக் காரண
மான இப்பட்டாடையையும் இவன் ஒருபொருளாகக் கருதின
னில்லை. இவன் செல்வநிலையும் மனநிலையும் இருந்தவாறென்னே!"
என்று முன்னினும் அதிகமாகச் சடையவள்ளலின்பால் அழுக்காறு

கொண்டனன் என்ப. இவ்வரிய சம்பவத்தையே, ...ஆறாத்

"ஆடையிலெழு சிலந்தி தோற்றுவிக்கப் பட்டின்
புடவை கிழித்த பெருங்கை"

(திருக்கைவழக்கம்)

எனவும்,

"விளைவாஞ் சிலந்தியை யாடையைக்கீறி வெளியில்விட்டும்
வளமான் கீர்த்திகொள் வேளாளர் பாண்டியன் மண்டலமே"

(பாண்டிமண்டல சதகம்)

எனவும்,

"உற்றதொடைப் புண்ணுக் குடைகிறிக் காட்டிநின்றான்
கொற்றவன்மு னன்கங்கை கோத்திரத்தான்"—

(ஆத்திசூடி வெண்பா)

எனவும் பாராட்டப்பட்டிருத்தல் காண்க.

குறிப்பு:—சோழநாட்டு நடந்த இச்சம்பவத்தைத் தொண்டைநாட்டுக்கேற்றித் தொண்டைமண்டலசதகவாசிரியர் கூறியகாரணம் யாதாயிருக்கலாம்? என அன்பர் சிலர்சந்தேகிக்கலாம். திருவெண்ணெய்நல்லூர்ச்சடையர்க்குத் தொண்டைவளநாட்டிலும் பெருங்காணிவளம் இருந்த உரிமைபற்றித்தமது நூலில் கூறத்துணிந்தாரென்றுதெளிதல் வேண்டும்.

சி. கு. நாராயணசாமி முதலியார்
காரியதரிசி
சாரதாவிலாஸ சபை,
கோயமுத்தூர்.

விவசாயம்.

Farm Or Fight?

சாகுபடியா சண்டையா?

பயிரிடுவோர்களாகிய கிருஷிகர்கள் நிலத்தை உழுது பயிரிடுவதைச் சாகுபடி செய்கிறார்களென்று சொல்லுவதைவிட, நல்ல விளைவு எடுக்கக் கலப்பையால் பூமியைக் குத்திக்கிளறி நிலத்தோடு சண்டைபோட்டுப் போராடுகிறார்களென்றே சொல்ல வேண்டும். கல்வியிற்சிறந்த கம்பர் ஏரெழுபதுபாடியபோது, "அரசர்கள் செய்யும்போரில் சிலர் வெல்வர்; சிலர் தோற்பர். ஆனால் கிருஷிகர் செய்யும் சண்டையில் யாசிப்பவருங்கூடத் தோற்கமாட்டார்கள்" என்று சொல்லியிருக்கிறார். இப்படி உலகத்தில் தேசங்களெங்கும் அங்கங்கே கிருஷிகர் பூமியோடு விசித்திரமான சண்டைசெய்கிறார்கள். இவர்களுடைய சத்துருக்களில் முக்கியமானவர் யாவர்? அவர்களை எவ்வாறு வெல்லவேண்டும்? என்று கவனிப்போம்.

முதலாவது எதிரி:—கிருஷிகனே ஆகிறான். எவ்வாறெனில்; ஒருவன் தான் செய்யவேண்டிய காரியங்களைப் பட்டம் தவறினால் நட்டமென்றுணராமல் காலத்தில் செய்யத்தவறினாலும் சரி; அல்லது தன்னுடைய உழைப்பு கொஞ்சமுமில்லாமல் "அதிர்ஷ்டமிருந்தால் கிடைக்கும்" என்ற ஒரு கெட்ட நம்பிக்கையுடன் சோம்பேறியாக வீண்காலம் கழித்தாலுஞ்சரி; இவ்விருவிதத்திலும கிருஷிகன் தனக்குத்தானே சத்துருவாகிறான். திருஷ்டாந்தமாக, ஒரு கிராமத்தில ஒரு உழைப்புள்ள குடியானவன பாடுபட்டுத் தன்நிலத்தின் மகசூலை ஏதோ மந்திரவசத்தால் அவன் நிலத்திற்கு இழுத்துக்கொண்டு போய்விட்டானென்று நியாயஸ்தலத்தில் முறையிட, குடியானவன், தன்னுடைய பழுதற்ற சாகுபடிக கருவிகளையும், பலமுள்ள உழவுமாடுகளையும் திடகாத்திரமான பண்ணையாட்களையும் கோர்ட்டார் முன் சாட்சிகளாக நிறுத்தி, பயிர்க் காலத்தில் தான் அநேக இரவு கண்விழித்துப்பயிர்களைக் காப்பாற்றி வந்த சிர

மக்தை பிரத்யட்சமாக சேர்ப்பிக்குமுன் கொண்டுவந்து காண்பிக்கமுடியவில்லையே என்று துக்கிக்கான். ஆகையினால் தகுந்த விளைவிற்குச் சுடியானவன் முயற்சியே காரணமாகும. "எல்லாம் கடவுள் செயல்" என்று சும்மாவிராமல் தங்களாலான முயற்சிகளைச் செய்துவிட்டு, "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்று பலனை எதிர்பார்ப்பது உத்தமம். விவசாயத்தில மேன்மேலான அமெரிக்கா ஜப்பான் இங்கிலாந்து முதலிய தேசங்களில் நீராவிக்கலப்பை மோட்டார்கலப்பைகளைப்பூட்டி ஏராளமாக உரம்செய்து பயிர்செய்வதால், சாகுபடிச்செலவு கம்மியாய் உலகச்சந்தையில் தானியங்களை அத்தேசத்து கிருஷிகர் நம்மைப்பார்க்கிலும் விலை சரசமாக விற்க, நாம் புராதனமான சற்றும் சீர்திருத்தமடையாத நாட்டு மரக்கலப்பைகளை கன்றுக்குட்டிகள் போன்ற மாடுகளைக்கொண்டு தகுந்த உரமிடாத பூமியை உழுது சாகுபடிசெய்து நல்ல மகசூல் எடுக்க நினைப்பது சரியல்ல. அயல்தேசங்களில கையாடும் இயந்திரங்களை இப்போதே நாம் இங்கே உபயோகப்படுத்த வேண்டுமென்று சொல்லவரவில்லை. நம்மிடத்திலிருக்கும் பலத்தை அதிகப்படுத்திக் கொஞ்சம் கொஞ்சமாக அயல்தேச நவீனமுறையைக்கைக்கொள்ள வேண்டுமென்னும் கோரிக்கைதான். ஏனெனில், துப்பாக்கியை கையாடத்தெரியாத ஒருவனுக்கு ஒரு துப்பாக்கிகொடுத்துச் சுடு என்றால், அவன் ஒருவேளை தன்னையே சுட்டுக்கொண்டாலும் கொள்வான். ஆகையினால் நாம் நூதனமுறைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக கைக்கொள்ளவேண்டும். இப்போது நாம் சிறு இரும்பு க்கலப்பைகளை உபயோகப்படுத்தலாம். அதையும் காலத்தில உழுவதற்கு உபயோகிக்கத் தயாராயிருக்கவேண்டும. கம்பெனிகளிலிருந்து உரம் தருவிப்பதற்குமுன், நம்மாட்டின் குப்பையை மழை வெயிலினின்று காப்பாற்றவேண்டும். மெலிந்த மாடுகள் அநேகம் வைத்திருப்பதிலும் நல்லமாடாக இரண்டொரு ஜோடி வைத்துக் கொள்வது உசிதமானது.

இரண்டாவது எதிரி:—படிப்பின்மை. இந்தப் படிப்பின்மையே தான் நம்தேசத்தில் நாகரிகம் சீக்கிரம் பரவாமலிருப்பதற்கும் விவசாயம் ஐக்கியம் முதலியவைகள் விருத்தியடையாமலிருப்ப

தற்கும் முக்கியமான காரணம். சாதாரணமாய் ஒரு கிராமத்தில் அம்மைவைக்கும் உத்தியோகஸ்தர் வந்துவிட்டாரென்றால், வைசூரி என்ற பெரிய வியாதியினின்றும் தப்புவிக்க வந்திருக்கும் நண்பரென்று அவரை நினையாமல், தீவர்த்திக்கொள்ளைக்காரர்களைக் கண்டதுபோல் பயந்து குடிகள் ஓடி ஒளிகிறார்கள். ஒரு ஊரில் ஒரு ஐக்கியசங்கம் ஏற்படுத்தி ஜனங்களைச் சாவ்காரர்களின் வலையினின்று தப்புவிக்கயத்தனித்தால், "அது ஒரு ஸர்க்கார்தொல்லை; நம்முடைய பணத்தைப் பறிப்பதற்கு இது ஒரு உபாயம்; நம்முடைய செட்டியாரோ நமக்கு வேண்டும்பொழுது எந்தச்செலவிற்கும் ஏராளமான தொகையைக்கொடுக்கிறார்; நம்மை மாதத்தவணையில் கொடுக்கும்படி நிர்ப்பந்திக்கிறாரில்லை" என்று நினைக்கிறார்களே ஒழிய, குடிகளின் நன்மையை உத்தேசித்து ஸர்க்காரால் ஐக்கியசங்கங்கள் ஏற்படுத்தப்படுகின்றனவென்று அறிகிறாரில்லை. இது அறிவின்மையினாலன்றோ! மேலும், நல்ல கலப்பைகளும் மாடும் விதைகளும் இருந்து, முன்யோஜனையும் யுக்தியும் ஸாமர்த்தியமும் இல்லாமற்போனால் பிரயோஜனமில்லை. தனக்கு இதம் செய்கிறவர்யார்? கெடுதல் செய்பவர்யார்? என்று தெரிந்துகொண்டு சாதகம் செய்கிறவர் சொற்படி நடக்கவேண்டும். முடிமுடியாய் நட்டால், கோட்டைகோட்டையாய் விளையு"மென்று எண்ணாமல் 'ஒற்றையலகு ஒப்பற்ற விளைவுகொடுக்கும்'' என்று, தனிமுதல் நடவை சௌகரியமானவரையில் கையாடவேண்டும். தழைக்குழைக்கு அலைந்து திரியாமல், "கொளுஞ்சி நெல்காட்டு" மென்றபடி ஒரு பசுந்தாள் பயிரை பூமியிலேயே விளைவித்துக்கொள்ள வேண்டும். களர் நிலமானால் தக்கைப்பூண்டை வளர்த்துக்களரை முறிக்கப்பார்க்கலாம். இத்தகையான முறைகளைக் கையாடுவதற்கு முதலில் உங்களுக்குப்பணம் தேவையாயிருக்கும். அதற்கு இலகுவான வட்டிக்குப்பணம் கிடைப்பதற்கு, உங்கள் ஊரில் ஒரு ஐக்கிய நாணயச்சங்கம் ஏற்படுத்திக்கொண்டு, உங்கள் கிராமத்தின் பூராப் பலனை நீங்களே அடையலாம். இவ்வைக்கிய முறையைக் கொள்வினை விற்பனையில் அப்பியசித்தால், மத்தியக்கொள்ளைக்காரர்களாகிய சாவ்காரர் தரகர் இவர்களினின்றும் தப்பலாம்.

மூன்றாவது விரோதி:—அகாலமழை மழைக்குறைவு காற்று முதலியன. இவைகளை நிவர்த்திப்பது மனிதர் யத்தனத்தால் முடியாதபோதிலும், ஆழமாக உழக்கூடிய கலப்பைகளால் உழுது மழைநீரை பூமியில நிறுத்தியும் ஜலக்குறைவில் விளையக்கூடிய பயிர்களைச் சாகுபடி செய்தும் கிணறுகள் வெட்டி நீர்ப்பாய்ச்சியும், ஒருவாறு இவ்விரோதிகளின் கொடுமையை அடக்கி அனுகூலப்படுத்திக்கொள்ள வழிதேடலாம்,

நான்காவது விரோதி:—பயிர்களின் மத்தியில் காணும் களைப்பூண்டுகளும் பூச்சிகளும். இவைகள் எப்படி உண்டாகின்றன? இவைகளை எப்படித்தடுப்பது? என்று யோசிக்ககாமல், 'இது தெய்வக்குறறமென்றும், நம்மாலாவதொன்றுமில்லையென்றும்' நினைத்து, கடவுளை பிரார்த்திக்கின்றனர். அவைகள் நிலத்தில் ஏராளமாய்க் காணப்பட்டாலும் முதலில் ஒரு களைப்பூண்டினின்றும் அல்லது ஒரு பூச்சியினின்றும் உற்பத்தியானவைதாம். "ஆகையால் கள்ளனையும் களையையும் கண்டவுடன் கட்டிவிடு" என்பதற்கு இணங்க, முதலிலேயே களைகளையும் பூச்சிகளையும் அடியோடு அழித்துவிட வேண்டும். உழவற உழாதவனும், தரிசுபோட்டவனும், பட்டந்தப்பிப்பயிர் செய்தவனும், களைகளுக்கும் பூச்சிகளுக்கும் நண்பராவார். செழிப்பாகச் சாகுபடியான ஒரு விஸ்தீரணத்தின மத்தியில் ஒரு சோம்பேறி தன் சிறு குண்டு நிலத்தைத் தரிசுபோட்டால் அந்தத்தரிசில் காணும் களைகளும் பூச்சிகளும் பல்கிப்பெருகி பக்கத்துப்பயிர்களில் விழுந்து, கெடுதியுண்டுபண்ணுமல்லவா? ஆகையினால் ஒரு சோம்பேறி தான் கெட்டதுமல்லாமல் பக்கத்து உழைப்புள்ள குடியானவனையும் நஷ்டத்துக்குள்ளாக்குகிறான். இப்போது கிராமாந்தரங்களில் பயங்கரமாய் வளர்ந்து, விஷஜந்துக்களுக்கு உறைவிடமாய் அநேக பூமியைக்கவர்ந்து கொண்டிருக்கிற சப்பாத்துக்கள்ளியைப் பார்ப்போம். அது முதல் முதலில் அவ்வூரில் எங்கேயோ ஒரு ஓரத்தில சிறிய செடியாக ஆரம்பித்திருக்கும். அக்காலத்தில் அதைக் கவனியாததால், இப்போது இந்த அனர்த்தம் உண்டாயிருக்கிறது. ஆனால் ஜனங்கள்மட்டும் இதைத்தொலைக்கத்திர்மானித்து விட்டால், இது இருந்த இடம் தெரியாமல

போவது நிச்சயமே. இம்மாதிரி சில கிராமங்களில் செய்திருக்கிறார்கள். சில இடங்களில் அச்சப்பாத்தியை வெட்டி மண்ணில் மக்கவைத்து உரமாக்குகிறார்கள். ஆகையினல் "சப்பாத்தி அவன் நிலத்திலதானே இருக்கிறது. புறம்போக்கிலதானே இருக்கிறது. நமக்கென்ன?" என்று இருக்கக்கூடாது.

ஒற்றுமையின்றித் தானென்னும் அகங்காரம் மேலிட்டு மிக அல்ப சங்கதிகளிலும்கூடத் தங்களுக்குள்ளே ஒரு தீர்மானத்திற்கு வாராமல், மிகத் திமிரடைந்து கோர்ட்டில் வழக்காடித் தாங்கள் நிலத்தில வியர்வைவிழ உழைத்துச் சம்பாதித்த சொத்துகளை இழந்து, யோக்கிதையுடன் கூடின மற்றக் கிராமத்தாரையும் சந்திக்கிழுத்து, ஊரைப்பாழ்படுத்துபவர் ஐந்தாவது விரோதியாவார். "முன்னே போனவன் குழிவிழுந்தால் பின்னால் வருபவருக்குத் திவர்த்தி பிடித்தால்போல்". இதுவரை வழக்காடிய அநேக ஜனங்களும் ஊராரும் இந்தக் கேவலஸ்திதிக்கு வந்ததைப் பார்த்தாவது "சேர்ந்துவாழ்வதே சிறந்த வலிமை" என்று நன்குணர்ந்து தங்கள் வழக்குகளைத் தங்கள் ஊரிலேயே ஒரு பஞ்சாயத்தார் முன்வைத்து அவர்கள் செய்யும் தீர்மானத்தின்படி நடக்க முயலவேண்டும்.

ஒரு தேசத்தாருக்கும் மற்றத் தேசத்தாருக்கும் உண்டாகும் சண்டை எப்போதாவது நேரிடக்கூடியது; ஆனால் கிருஷிகர்கள் மேலே சொன்ன ஏழு விரோதிகளுடன் சதா சண்டைசெய்ய வேண்டியிருக்கிறதாகையால், இந்தப் பயிரிடுதலே ஒரு மஹாயுத்தம் என்று ஏன் சொல்லக்கூடாது?

கே. ஆர். சங்கர அய்யர்,
விவசாய இன்ஸ்பெக்டர்.

மதிப்புரை.

பூர்ண சந்திரோதயம்:—இதன் பங்குனி-மீ சஞ்சிகை வரப் பெற்றோம். இதனுள் மதம், சாஸ்திரம், சித்திரவித்தை, நாகரிகம் என்னும் இவ்விஷயங்களைப்பற்றிப் பலவியாஸங்கள் அருமையாக எழுதப்பெற்றிருக்கின்றன. அவற்றுளும் மீராபாய், பெண்கல்வி என்னும் விஷயங்கள் பெண்கட்கு அறிவையும் உற்சாகத்தையும் கொடுக்கக்கூடியனவாக எழுதப்பெற்றிருக்கின்றன.

ஜனோபகாரி:—இதனது பங்குனி சஞ்சிகை கிடைக்தது. இதனுள் தொழிலைப்பற்றிய வியாஸங்கள் அருமையாக எழுதப்பெறுகின்றன. இம்முறை எழுதப்பெற்றிருக்கும் "இந்தியாவில் குங்கிலியத்தொழில்" என்னும் வியாசம், மிகஅருமையாக எழுதப்பெற்றிருக்கிறது. இன்னும அரிய வியாசங்களும் எழுதப்பெற்றிருக்கின்றன.

1916 வருஷம் இந்தியன் நேஷனல் காங்கிரஸ் அக்ராஸனாதிபதியவர்கள் உபந்யாஸம் என்னும் ஒரு தமிழ்ப்புத்தகம் வரப்பெற்றோம். இதனை ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்தவர்கள், மதுரை வக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ R. S நாராயணசாமி ஐயர் அவர்கள் B. A., B. L. இவர்கள் நம்தமிழ்நாட்டுக்கு உதவுவதற்கென்றே உருவெடுத்த உபகாரி. இவர்கள் இதனைப்போல இன்னும் அரிய உபகாரங்கள் தமிழர்க்குச்செய்யக்காத்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது. இந்தச்சிறு புத்தகத்தை மதுரை டிஸ்டிரிக்ட் காங்கிரஸ்கமிட்டியார் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இதன் விலை அணா 0-2-0. வேண்டுவோர் மேற்கண்டிருக்கும் கமிட்டிசெக்ரிடரிக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

விவேகோதயம்:—இதனது மாசி மாதத்து சஞ்சிகை வரப்பெற்றோம். இதனுள் பல அரிய விஷயங்கள் தக்கவர்களால் எழுதப்பட்டிருக்கின்றன.

ஆரியதர்மம்:—இது கும்பகோணம் காமகோடி பீடாதிபதியவர்களது அனுக்கிரகத்தின் பேரில் வெளியாகிவருகிறது. புத்தகம் தக்க உயர்ந்த க்லேஸ் கடிதத்தில் அச்சேறியிருப்பதற்கிணங்க, விஷயங்களும் தக்கனவாகி ஆர்யதர்மத்தை உயர்த்தும் தன்மையவாகி இருக்கின்றன. பிரணவோபாஸ்தி எனும் வியாஸம் அருமையாக எழுதப்பெற்றிருக்கிறது.

வைத்தியகலாநிதி:—இதனது நான்காவது தொகுதி ஐந்தாவது பகுதி வரப்பெற்றோம். பலநுட்பமான வைத்திய விஷயங்களும் அனுபவமுறைகளும் பதார்த்த குணவிமர்சங்களும் எழுதப்பெற்றிருக்கின்றன.

சைவப்பிரகாசம்;—இதன் தொகுதி 1 பகுதி 7 கிடைத்தது. சைவசம யத்தைச்செவ்வனே தெரிவிக்கும் அரியபத்திரிகை. இந்த பத்திரிகையில் எல்லா விஷயங்களும் நன்கு எழுதப்பெற்றிருக்கின்றன. அவற்றுள் தமிழ்மொழி தமிழ்ப்பயிற்சி, கற்பு, ஏகம்பவாணன் இவை தமிழர்க்கேற்ற விருந்தேயாகும்.

சாந்திவசனம்:—இதனது தொகுதி 1 பகுதிகள் 3, 4, 5. 6 வரப்பெற் றோம். இது மாதம் ஒரு புத்தகமாக வருகிறது. இத்தொடரில், பிரமஞான சங்கத்தாரால் வெளியிடப்பட்டுவரும் Adyar Pamphlets, Adyar Popular Lectures முதலிய சிறு இங்கிலீஷ்புஸ்தகங்களை, இங்கிலீஷ் பயிற்சியில்லாத தமிழ் மெம்பர்களும் மற்ற அபிமானிகளும் படித்துத்தெரிந்து கொள்ளும் பொருட்டுத் தமிழில் மொழிபெயர்த்து மாதமொரு புத்தகமாக வெளியிட உத் தேசித்திருக்கிறதாகவும், இதன் வரும்படியைக்கொண்டு ஒரு தரும பாடசாலை நடத்திவருவதாகவும், இது ஜூலை மாதத்தையே முதல் மாதமாகக்கொண்டி ருக்கிறது என்றும், முன்பணம்செலுத்தும் சந்தாதாரர்களுக்கு தபால்சார்ஜ் உள்பட ரூ 1-8-0 என்றும் இதனைப் பிரசுரித்தவர்கள் குறிக்கிறார்கள். தேவையுள்ளவர்கள் தஞ்சாவூர் ஜில்லா பேரளம் போஸ்டு திருமியச்சூர் சாந்தி ஆசிரமம் காரியதரிசிக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

கடிதங்கள்.

சபை நிகழ்ச்சிக் குறிப்புகள்.

புதுவயல் ஞானப்பிரகாச சபை.

ஸ்ரீபரமேசுவரனது திருவருளால், இந்த சபையின் 2வது வருஷ 9வது மாதாந்தக்கூட்டம் நளிது௵ மாசிமீ 30உ (13-3-17) மங்களவாரம் மாலை 2½ மணிக்கு, சொக்கலிங்கம்புதூர் மாணிக்கவாசக வித்யாசாலைத் தலைமையாசிரி யர் பிரம்மஸ்ரீ செ. இராமமூர்த்தி ஐயரவர்கள் அக்கிராசனத்தின்கீழ் கூடிற்று. [illegible] பிரம்மஸ்ரீ [illegible] அவர்கள் முகவுரை மொழிந்தவுடன், (1) தமிழ்ப் [illegible] (2) ஸ்ரீராம பாதுகாபட்டாபி [illegible] விஷயங்கள் முறையே [illegible] (2) காட்டுப்புதூர், பிரம்மஸ்ரீ [illegible] (3) காரைக்குடி வித்துவான் பிரம்மஸ்ரீ M. V. கோவிந்தராஜ ஐயங்கார் அவர்கள் (4) கண்டனூர் பிரம்மஸ்ரீ (லால்குடி) சுப்பிர மணிய சாஸ்திரிகள் அவர்கள் என்னும் இவ்வறிவாளர்களால் தெளிவாக உபந் நியசிக்கப் பெற்றன. பிரதி உபந்யாச முடிவிலும் பிரம்மஸ்ரீ தலைவரவர்கள்

தமிழ் அரிய அபிப்பிராயங்களை விளக்கமாகக்கூறினார்கள். இடையிடையே ஸ்ரீ. க மாணவன் C. D. சுப்பிரமணியம் என்பவன் தேனினும் இனிய தேவாரதிருப்பாக்களைப் பண்ணமைதியுடன் ஓதினான். யாவருக்கும் ஞா. சு. தமிழாசிரியர் வந்தனோபசாரங் கூறியவுடன் ஷை ஆங்கில ஆசிரியர் பிரம்மஸ்ரீ மீனாட்சி சுந்தரம் ஐயரவர்கள் ராஜவாழ்த்துக்கூறினதும், ஹார சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பெற்று மங்கள கரகோஷத்துடன் ஸபை நன்கு நிறைவேறியது. சுபம்.

சேவிக்குணவு கொள்வோன்.

கோநகர்.

ஞானசம்பந்த கற்சபை.

இதன் மாதாந்தக்கூட்டம் நளவூ பங்குனிமீ ௰௩௳ (26-3-17) திங்கட்கிழமை பிற்பகல் 4½ மணிக்கு கூடினது. மதுரைத் தமிழ்ச்சங்கம் வித்துவான் ஸ்ரீ. உப. வே. திரு-நாராயணையங்கார் ஸ்வாமிகளும், காரைக்குடி, கம்பராமாயணப்பிரசாரகர் ஸ்ரீ M. V. கோவிந்தராஜய்யங்காரவர்களும், சொக்கலிங்கம் புத்தூர், மா. வா. வித்தியாசாலைத் தலைமைத் தமிழாசிரியர் ஸ்ரீ ரெ. இராமமூர்த்தி ஐயரவர்களும், பலவான்குடி சி. வி. வித்தியாசாலைத்தலைமைத்தமிழாசிரியர் ஸ்ரீ குமாரவீரையரவர்களும் விஜயஞ்செய்திருந்தார்கள்.

காரைக்குடி, கம்பராமாயணப்பிரசாரகர் ஸ்ரீ M. V. கோவிந்தராஜய்யங்காரவர்கள் "வால்மீகியும் கம்பரும்" என்றெடுத்துக்கொண்டு இருவர் கவிகளுக்குமுள்ள ஒற்றுமையை விளக்கிக்காட்டி அழகாகப்பேசினார்கள்.

சபையோர்யாவருக்கும் வந்தனோபசாரஞ்செய்யப்பெற்று இரவு 8மணிக்கு சபை பூர்த்தியாயிற்று.

சம்பந்தன்.

இராயவரம்

சாரதாவிலாச சபை.

பரமகருணாநிதியாகிய சிவபெருமான் திருவருளானே இனிது நடைபெற்று வருகின்றதான இக்கழகத்தின், இரண்டாம் வருடத்து ஆறும் மாதக்கூட்டம் இம்மதியின் ௰௬௳ (29-3-17) குருவாசரத்தன்று பிற்பகல் 3½மணிக்குக் கூடிக் கடவுள்வாழ்த்தோதப்பட்டு சபையார் வேண்டுகோட்படி மதுரைத் தமிழ்ச்சங்கத்தலைவர்களும், வித்தியாபாநுப் பத்திராதிபரும், கம்பராமாயணப்

பிரசாரகருமாகிய வித்துவான் பிர்மஸ்ரீ M. V. கோவிந்தராஜய்யங்காரவர்கள் அக்கிராசனத்தமர்ந்து முகவுரை கூறிய பின்னர், வித்தியாசாலை மாணவர் ஸ்ரீசேஷையர் வித்தை என்பதையும், சமஸ்கிருத பண்டிதர் பிரம்மஸ்ரீ S. மீனாட்சிசுந்தர தீக்ஷிதரவர்கள் ஸ்ரீ கிருஷ்ணலீலா என்ற விஷயத்தையும், தலைவரவர்கள் கம்பர் கவிதிறம் என்ற விஷயத்தைப்பற்றியும், ஒவ்வொருவரும் நீண்டநேரம் தத்தம் நூலாராய்ச்சியைக்கொண்டு மிக்க திட்பநுட்பமாய் யாவருமுவக்குமாறு கூறிமுடித்தார்கள்.

பின்னைத் தலைவரவர்கள் கூறிப்போந்த விஷயத்தை வியந்து மதுரைத் தமிழ்ச்சங்கத்தங்கத்தவரும் இங்கர் வாசருமான ஸ்ரீ பாலகவி. K. நல்லைய ஆசாரியவர்கள் வெண்பாவொன்று கூறித்தேவாரா தி யருட்பாக்களின னிசையோடோதப்பெற்று வந்தமேருபசாரத்துடன் ஹாரசந்தனாதிகள் வழங்கி 8½ மணிக்கு சர்வமங்களகரகோஷத்துடனிறைவெய்தியது.

வெண்பா.

கம்பநாட் டாழ்வார் கவித்திறமை நன்குறைத்தா
னும்பநாட் டாரமுத மொக்கவே—பம்புவியிற்
கோவிந்தன் சீரடியைக் கோதிலா தேத்திடுநற்
கோவிந்த ராஜனினைக் கொண்டு.

சுபம்! சுபம்!! சுபம்!!

நன்மை விரும்பி.

சென்னை

வர்ணாசிரமதர்ம ஸம்ரக்ஷணஸபையின்

இரண்டாவது வருஷத்திய மகாசங்கம்.

(தேதியூர்)

இது, நளஞு பங்குனிமீ உயசஉ (6-4-17) வெள்ளிக்கிழமை முதல் மூன்று நாட்களில், தஞ்சாவூர் ஜில்லா நன்னிலந்தாலூகா தேதியூர் என்னுங் கிராமத்தில், அவ்வூர் மகாஜனங்களின் முயற்சியால் நடைபெற்றது. இம்மகா சபை அச்சிறியவூரில் நடைபெறக்காரணம், சென்ற ஒரு வருஷகாலமாக அவ்வூரில் "ஸ்ரீ மீனாக்ஷிசுந்தர வித்தியாமந்திரம்" என்னும் பெயருடன் நடைபெற்று வருகிற வேத சாஸ்திர பாடசாலையின் ஸ்தாபகர் ஸ்ரீமத் வித்துவான் சுப்பிரமணிய தீக்ஷிதரவர்களின் முயற்சியேயாம்.

ஸபைக்கு விஜயஞ்செய்தோர்:—இச்சபையின் கௌரவ காரியதரிசியாகிய சென்னை ஹைகோர்ட்டு வக்கீல் ஸ்ரீமத் T. R. இராமச்சந்திர யையரவர்

கள், இவர்களுக்குத்தம்பியும் முன்னே ஸாக்ஷாத் இராமச்சந்திர மூர்த்திக்குப் பிரியாத்துணைவனுகி விளங்கிய இலட்சுமணமூர்த்தியே இப்பொழுது வருணு சிரம தருமஸம்ரக்ஷணார்த்தம் சாக்ஷரூபத்துடன் வந்ததுபோல் விளங்குபவரும் ஆகிய ஸ்ரீமத் T. R. கிருஷ்ணஸ்வாமிஐயரவர்கள், இச்சபையினிடத்து உள் ளன்பு பூண்ட தஞ்சாவூர் ஜில்லா ரிஜிஸ்தரார் ஸ்ரீமத் T. கிருஷ்ணசாமி ஐய ரவர்கள், தஞ்சைப்பழைய முனிஸிபல் சேர்மன் ஸ்ரீமத் இராமச்சந்திராயரவர் கள், தஞ்சை ஹைகோர்ட்டு வகீல் ஸ்ரீமத் கோதண்டராம ஐயங்காரவர்கள் முதலிய சனதனவான்களும், கல்கத்தா காலேஜ் பிரதம ஸமஸ்கிருத பண்டிதர் பிரும்மஸ்ரீ மகாமகோபாத்தியாய இலட்சுமண சாஸ்திரிகள், மன்னார்குடி பிரும்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள், சென்னைப் பசையப்பன் காலேஜ் ஸம்ஸ்கிருதபண்டிதர் பிரும்மஸ்ரீ சுவேதாரணியம் நாராயண சாஸ்திரிகள், கொடவாசல் பிரும்மஸ்ரீ நரஸிம்மாச்சாரியார், திருநெல்வேலி பிரும்மஸ்ரீ இராஜவல்லபசாஸ்திரிகள் முதலிய வித்துவான்களும், கோனேரிராஜபுரம் விஷ்ணுபுரம், முடிகொண்டான் முதலிய பக்கத்துக்கிராமவாசிகளுமாகச் சுமார் எழுநூறுபேர் கூடினர்கள்.

சபைநிகழ்ந்த இடமுதலியன:—அக்கிரகாரத்தின் மத்தியிலுள்ள ஷெ வேதசாஸ்திரபாடசாலையின் வாசலில் விஸ்தாரமான பந்தல் - அலங்காரத் துடன் அமைக்கப்பெற்றிருந்தது. பூந்தோட்டம் ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து வரும்மார்க்கமும், உள்ளூர் வீதிகளும் மகர தோரணங்களால் அலங்கரிக் கப்பெற்று விளங்கின. அயலூர்களிலிருந்து வந்தவர்களை எல்லாம் உள்ளூர் பிராமணர்கள் பழையகாலத்து முறைப்படி ஆதரவுடன் உபசரித்தார்கள். முதல்நாள் வெள்ளிக்கிழமை பகல் 2மணிக்கு உள்ளூர் மகாஜனங்கள், பூரண கும்பம் வேதகோஷம வாத்தியகோஷங்களுடன் ஸபையாரை வரவேற்றார்கள். அன்புடன் கேட்கவந்து கூடின ஜனங்களால் பந்தல் நிறைந்திருந்தது.

சபைநிகழ்ச்சி விவரம்—யாவரும் கோரிய வண்ணம் பிரம்மஸ்ரீ T. R. இராமச்சந்திர ஐயரவர்கள் அக்கிராசனம் வகிக்க, வைதிக சாந்திபடனம் செய்யப்பெற்றது. கிராமத்தாராலும், வித்தியாசாலைக் கமிட்டியாராலும் முறையே உபசரணைப்பத்திரங்கள் படித்துக்கொடுக்கப்பெற்றன. அக்கிராச னாதிபதியவர்கள், அவற்றிற்குத்தக்க பதிலளித்ததுமன்றி அழகியதொரு முன் னுரையுங்கூறினார்கள். அவற்றின் பின், முதல் நாள் ஐந்து பிரசங்கங்களும், இரண்டாநாள் இரண்டு வேளையுமாக ஆறுபிரசங்கங்களும், மூன்றாநாள் இர ண்டுவேளையுமாகப் பத்துப்பிரசங்கங்களும், ஆக 21 அழகாக நடைபெற்றன. உபந்யாசங்கள் பெரும்பாலும் தமிழிலும், சிலமாத்திரம் (மூன்று) ஸம்ஸ்கிரு தத்திலும் நிகழ்ந்தன. அவற்றுள்மூன்று நான்கு மிகவும் சிலாக்கியமானவை.

இவற்றின் ரஸங்களை மேன்மேலிருந்து சாதாரப் பருகினவர்களே யறிவர். ஜனங்கள் யாவரும் "சித்திரப்பாவையின் அகத்தடங்கச் செவிவாயாக நெஞ்சுகளனாக கேட்டவை கேட்டவை விடாதுளத்தமைத்து"க்கொண்டிருந்தார்கள். சில பிரேரேபணைகளும் செய்யப்பெற்றன. அவற்றுள் முக்கியமானவை (1) உபஸபைகளும் பாடசாலைகளும் அங்கங்கே ஏற்படவேண்டும். (2) இந்த ஸபைகளில் நமது மதப்பிரசாரகர்களை யேற்படுத்தி மதபோதனை செய்விக்கவேண்டும். (3) பிராமணர்கள் யாவரும் இச்சபையின் மூலதனத்திற்காகக் குடும்பத்திற்கு ஒரு ரூபா முதல் இயன்ற அளவும் நன்கொடையளிக்கவேண்டும் என்பவைகளாம்.

இரண்டாநாள் இராத்திரியில் ஒரு புல்லாங்குழற் கச்சேரியும், மூன்றாநாள் இராத்திரியில் ஒரு மேளக்கச்சேரியும் நடைபெற்றன. இவ்வாத்தியகாரர்கள் யாதொரு பிரதிப்பிரயோஜனத்தையும் எதிர்பாராமல் தாங்களாகவே வந்து வாசித்துச்சபையோரை மகிழ்வித்தார்கள். இம்மூன்று நாளும் தேதியூர் முழுதும் கலியாணமாக விளங்கிற்று. ஸகல உபசாரங்களுடனும் ஸபை மங்களகரமாக நிறைவேறிற்று.

கண்டுகளித்தோன்.

பலவான்குடி.

மணிவாசக சங்கம்.

(7—4—17)

திருவருட்பேற்றால் இன்று நம் மணிவாசக சங்கத்தின் மாதக்கூட்டம் கூடிற்று. காரைக்குடி கம்பராமாயணப் பிரசாரகரும், வித்தியாபாநு பத்திராதிபருமாகிய ஸ்ரீ M. V. கோவிந்தராஜய்யங்காரவர்கள் அக்கிராசனம் வகித்து அழகிய முகவுரைகூற, இந்துமதப் பிரசாரகர் ஸ்ரீ S. விசுவநாத சாஸ்திரிகள், போதகர் மு. வி. கலாசாலை உபாத்தியாயர் ஸ்ரீ ஆழ்வாரையங்கார், சி. வி மாணவி கி. ஜீவரத்தினம். வைடிமாணவன் சித. பெரியகருப்பன், வைடி மாணவி பழ. சின்னம்மாள், க. வி. கலாசாலை மாணவன் மு. சாமிநாதன் இவர்களால் விக்கிரகாராதனம், நட்பிற் பிழைபொறுத்தல், பொன்னனையான் சரித்திரம், மெய்ப்பொருணாயனார் சரித்திரம், கொலைமறுத்தல், தமயந்தி சுயம்வரம் என்னும் அரிய விஷயங்கள் அழகாக உபந்யசிக்கப்பெற்றன. முடிவில் தலைவரவர்கள் சிறந்த பிரமாணங்களுடன் அபிப்பிராயங்கூற வந்தனோபசாரத்துடன் பூச்சந்தனாதியன வழங்க, சங்கம் இனிது நடைபெற்றது.

சண்முகநாதன்.

பொதுவர்த்தமானம்.

யுத்த ஆருடம்:—பிங்கள வருடப் பிரவேசத்தின் ஜாதகலக்கினம் நமது ராஜாங்கத்தார்க்கு வெற்றியை யுண்டாக்குவதா யிருக்கின்றதென்றும், இங்கிலாந்திற்கு 29-5-17ல் ஒன்பதாமிடத்தில் குரு வருகின்றபடியால், அப்போது நமது ராஜாங்கத்தார் வெற்றியுடன் யுத்தத்தை முடிப்பார்களென்றும் ஒரு ஜோசியர் விளம்பரஞ்செய்திருக்கின்றார்.

கல்மழை:—இம்மாதம் 13ந்தேதியாகிய பிங்கள வருடம் சித்திரை மாசப் பிரவேச தினத்தன்று பகல் 5-20 மணிக்குத் திருப்பத்தூரில் திடீரென்று கல்மழைபெய்தது. ஓயாது 20 நிமிஷம் வரையில் பெய்தது; அதனால் செட்டிகுளத்திலிருந்து ஜலங்கொண்டு வந்த சில ஸ்திரீகள் பலமாகக் காயமடைந்தனர். அநேக முனிசிபல் லாந்தர்களின் கண்ணாடிகளும் சிம்னிகளும் உடைந்துபோயின. சிலவிடங்களில் பூனைத்தலை யளவுள்ள கற்கள் விழுந்தன. வீதிகளெல்லாம் சலவைக்கற்கள் பரப்பியதுபோலிருந்தன. வீடுகளில் பிள்ளைகள் கற்களைக்குடங்களில் சேர்த்துவைத்திருந்தார்கள்; அவை 4மணி நேரம் கரையாமலேயிருந்தன.

வைத்தியக் குறிப்புகள்.

மந்தாரை.

இது வெள்ளை மந்தாரை, காட்டு மந்தாரை என இரண்டு வகைப்படும்.

வெள்ளை மந்தாரை;—(1) இதன்வேரைக் கஷாயமிட்டுக்காய்ச்சி யெடுத்த அக்கஷாயத்துடன் சிறிது நல்லெண்ணெயைச் சேர்த்துக்கூட்டி சிறிய சீழ்க்கட்டிகளின்மேல் பூசிவருவதால் நல்ல குணமுண்டாகும். (2) இதன் புஷ்பத்தையும் சிறிது மிளகையும்வைத்து ஆட்டியெடுத்து சிரோவேதனையில் நெற்றிக்கட்டில் பற்றுப்போடலாம். (3) இம்மந்தாரைப்பட்டையின் சாற்றை சர்மவியாதிகளிலும் கண்டமாலை முதலிய கழலைகிரந்தி வியாதிகளிலும் உட்கொள்ளக்கொடுக்க நல்ல பலன் உண்டாகும்.

காட்டுமந்தாரை,—(1) சீதபேதியைத் தடுப்பதற்கு அல்லது ஸ்வஸ்தம் செய்வதற்கு இச்செடி சிறந்தவஸ்து. (2) கிருமிஹரமான குணம் இதற்கு விசேஷமாயுண்டு. (3) கல்லீரலைப்பற்றிய வியாதிகளில் இச்சாற்று உபயோககரமாயிருக்கும். (4) இதன் வித்துக்களைக் காடிவிட்டு ஆட்டி, விஷகுணமுள்ள ஜந்துக்கள் கடித்துப் புண்ணாகிய இடங்களில் தடவுவதால் குணமுண்டாகும்.

வைத்தியகலாநிதி.

உள்ளூர் வர்த்தமானம்.

காலநிலை:—செங்கதிரோன் வெம்மை மிகவும் அதிகம். குளங்குட்டை ஊருணியாவும் வறண்டுபோயின. அங்கங்கே இரண்டொரு கிணறுகளில் மாத்திரம் கொஞ்சங்கொஞ்சம் நீருண்டு. குடிதண்ணீருக்கு உபயோகப்படும்படி இவ்வூருக்கு மேற்கே இரண்டுமைல் தூரத்திலுள்ள பொன்னுனூருணியிலிருந்து நாள்தோறும் வண்டி 11 (வண்டி ஒன்றுக்கு நாலுநடைவீதம்) ஜலம் கொணர்ந்து ஊர் முழுதும் குடங்குடமாக ஊற்றிக்கொடுக்கும்படி, புண்ணியவான்களாகிய இரண்டு ஸ்ரீமான்கள் திட்டஞ்செய்திருக்கிறார்கள். அவர்கள்-சு. ப. கு சொக்கலிங்கம் செட்டியாரவர்களும், சு. முரு ஷண்முகம் செட்டியாரவர்களும் ஆவர். இவர்களுள் சு. ப. கு. சொ. அவர்கள் தருமம் நகரத்தார் முதலியோர்களுக்காக எட்டுவண்டியும்; சு. முரு. ஷ. அவர்கள் தருமம் பிராமணர்களுக்கும் சைவர்களுக்குமாக மூன்று வண்டியுமாம். இதனால் ஜனங்கள் இவ்விருவரையும் வாயார வாழ்த்துகிறார்கள். வருண பகவான் சீக்கிரம் கிருபை செய்யாவிட்டால் ஜனங்கள்குடியோடவேண்டி வரும். நகரத்தார் கூடிக் கோயிலில் வருணஜபம் வைக்கவுத்தேசித்திருப்பதாக வதந்தி. நடைபெற்றால் நலமே.

ஞானசம்பந்தநற்சபை:—இதன் ஐந்தாம்வருடப்பூர்த்திக்கொண்டாட்டம் வைகாசிமீ ௫, ௬ (மேமீ 18, 19) தேதிகளில் நடைபெறும். இவ்விரு தினங்களிலும் குடும்பசபையில், திருச்சி ஸப்ஜட்ஜ் A. S. பாலசுப்பிரமணிய ஐயரவர்கள் அக்கிராசனம் வகிக்க, அறிஞர்கள் பலரும் பிரசங்கம் புரிவார்கள்.

கற்பகவிநாயக கலாசாலை:—இதற்கு மூலதனம் கொஞ்சங்கொஞ்சமாகச் சேர்ந்துவருகிறதோடு மாட்சிமைபொருந்திய புதுக்கோட்டையரசாங்கத்தாரும் இவ்வருஷத்திலிருந்து வருஷமொன்றுக்கு முந்நூறு ரூபாவீதம் இக்கலாசாலைக்கு நன்கொடையளித்து வரும்படி ஏற்பாடுசெய்திருக்கிறார்கள். இது ரொம்பவும் பாராட்டற்பாலதாம்.

அறிவிப்பு.

நம் ஆபீஸ் காலண்டரில் ஒரு காலண்டர் தனியே ஆர்டர் கொடுத்தவர்களுக்கு (ஒரு காலண்டராகப் போஸ்டில் பத்திரமாகச் சேரமாட்டாதாகையால்) இதுவரை அனுப்பக்கூடவில்லை. இனிச்சீக்கிரம் அனுப்புவதற்காக வேறு ஸ்பெஷல் அட்டை (Board) தயாராகிவிட்டது. சீக்கிரம் அனுப்பப்பெறும்.

மானேஜர்
தனவைசியன் ஆபீஸ்.